விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 04 புதன்கிழமை (20.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 336

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## நிரந்தர தீர்வைப் பெற நல்லிணக்கம் அவசியம்



(லண்டன்)

பல தசாப்தங்களாக உள்நாட்டுயுத்தம் இடம்பெற்ற இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் மூலமாகவே நிரந்தரத் தீர்வை பெறமுடியும் என பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் பிரித்தானிய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எட் மிலிபேன்ட், பிரதமர்



டேவிட் கமரூனிடம் வாய்மொழிமூலமாக எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே கமரூன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

பிரித்தானியா பிரதமர் டேவிட் கமரூன் (கன்சர்வேட்டிவ் கட்சி) தெரிவித்த கருத்து,

2013 ஆம் ஆண்டுக்கான பொது நலவாய மாநாடு இலங்கையில் நடத்தப்படும் என 2009 ஆம் ஆண்டு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. அது எனது தீர்மானம் அல்ல. எனினும் அந்த மாநாட்டில் நான் கலந்து கொள்ள வேண்டும் என கூறினேன். எனது பங்கேற்பின் மூலம் இலங்கையின் நிலைமை தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்தை திருப்ப முடியும என நினைத்தேன். உண்மையில நான் அதனையே செயதேன. 1948 ஆம் ஆண்டு

19-ம் பக்கம் பார்க்க

## சித்திரவதைகள் தொடர்பில் உள்.விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்நாட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின ஆணையாளர் பிரதீபா மஹானாம ஹேவா தெரிவித்துள்ளார்.

முக்கியமாக கடந்த காலங்களில் இடம் பெற்றசித்திரவதைகள் தொடர்பிலஉள்நாட்டு விசாரணைகள் முதலில் ஆரமபிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசாரணைகளுக்கு பொது நலவாய நாடுகள் செயலகம் ஆலோசனைகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்க உள்ளதாகவும் பிரதீபா தெரிவித்தார்.

சித்திரவதைகள் தொடர்பில் உள்நாட்டு ரீதியான விசாரணை நடத்தபபட வேண்டுமென பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதற்கு அமைய உள்நாட்டு ரீதியான விசாரணைகளை இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஆரம்பித்துள்ளதாக பிரதீபா தெரிவித்துள்ளார்.

19-ம் பக்கம் பார்க்க

## ஆசிரியர் எங்கே? வவுனியாவில் போராட்டம்

(வவுனியா)

தேர்தலில் வாக்களிப்பதற்காக வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத திற்குச் சென்றபோது காணாமல் போயுள்ள வவுனியா அல்ஹாமியா பாடசாலையைச் சேர்ந்த கார்த்திகேசு நிரூபன் என்ற ஆசிரியரைக் கண்டு பிடித்துத் தருமாறு ஆசிரியர்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று செவ்வாய்க்கிழமை வவுனியாவில் நடத்தியுள்ளனர்.

வவுனியா தெற்குக் கல்வி வலயப் பணிமனைக்கு எதிரில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்திருநததது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன மற்றும் வடமாகாண சபை உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்டனர்.

ஆசிரியர் நிரூபனைக் கடத்தியவர்கள் அவரை விடுதலை செய்ய வேணடும் எனக் கோரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள், ஆசிரியர்களைக் கடத்துவதை நிறுத்துமாறும, அவர்களைக் கைது செய்ய வேண்டாம் என்றும் கோரினர்.

இந்த ஆசிரியர் காணாமல் போய இரண்டுமாதங்களாகிவிட்டபோதிலும் மனித உரிமை ஆணைக்குழுவினரும் பொலிசாரும் இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என கண்டனம் தெரிவித்துள்ளனர். (செ-11)

## மன்மோகன் சிங் வராதது தமிழர்களுக்கு துரதிர்ஷ்டம்

### அமைச்சர் டக்ளஸ் கருத்து

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங் கலந்து கொள்ளாமை தமிழர்களுக்குத்தான் துரதிர்ஷ்டவசமாக அமைந்துவட்டது என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்தோடு பொதுநலவாய நாடுகளின் மாநாடு அரசுக்கு கிடைத்த வெற்றியாகும். மாநாடு எதிர்பார்த்ததை விட சிறப்பாக நடைபெற்றது எனவும் தெரிவித்தார். யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக காலை இடம்பெற்றது.


இதில் தலைமையுரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டமானது நல்ல நோக்கங்களை முன்வைத்து நடத்தப்படுகின்ற போதும் தவறான புரிதல்கள் மாறுபட்ட உள்நோக்கங்கள் காரணமாக இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கலந்து கொள்ளாமை துரதிர்ஷ்டவசமானது. பல காரணங்களை முன்னிட்டு கடந்த சிலமாதங்களாக மாவட்ட

20-ம் பக்கம் பார்க்க

## பிள்ளைகளை இழந்த தாய்மார்களை முரளிதரன் கொச்சைப்படுத்தியுள்ளார்

### கடுமையாக கண்டிக்கிறார் மனோ



(கொழும்பு)

முத்தையா முரளிதரன் தனது அரசாங்கத்தை வானளாவ புகழ்ந்து பேசலாம். ஆனால் பெற்ற பிள்ளைகளை இழந்து தவிக்கும் தாய்மார்களை கொச்சைபடுத்தி, முரளிதரன் பேசியுள்ளதை ஒருபோதும்



ஏற்றுக்கொள்ள முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆட்சியில் இந்த நாடு இன்று ஆசியாவின் ஆச்சரியமாக மாறி, உலக ஆச்சரியமாகும் பாதையில் நடைபோடுகிறது என்றும் சொல்லலாம். இவை பற்றி நாம் கிஞ்சித்தும் கவலைப்பட போவதில்லை. தங்களது இருப்புகளை தக்க வைத்துக் கொள்வதற்காக, இது போன்று கருத்து கூறும் நீல இரத்தம் ஓடும் தமிழர்கள் நாடு முழுக்க இருக்கிறார்கள்.

ஆனால், இருபது, முப்பது தாய்மார்கள் தங்களது பிள்ளைகளைக் காணவில்லை என அழுது புலம்பி போராட்டம் நடத்துவதனால் மனித உரிமை

20-ம் பக்கம் பார்க்க

## சட்டம் ஒழுங்கு யாழில் சீர்குலைவு

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்து விட்டதாக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பாரிய குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புறக்கணிப்பிற்கு மத்தியிலும் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்டத்தின் சட்டம் ஒழுங்கு பற்றி, ஆராயப்பட்ட போதே பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீரங்கேஸ்வரன் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

அங்கு அவர்மேலும்தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் தற்போது மிகவும் மோசமான நிலையில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்து விட்டது. வலிவடக்கு மக்கள் தங்களை

20-ம் பக்கம் பார்க்க

up to 25% CONDITIONS APPLY
Special offer
நத்தார் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக்கழிவு.
For Quality Tiles & Sanitaryware
Ranjanas CERAMIC
(C-5314)
# 212, Palaly Road, Jaffna / #05, Stanley Road, Jaffna.
Tel:- 021 222 0033 / 021 222 4777

## போரினால் பாதிக்கப்பட்ட 300 பேருக்கு நட்டஈடு

(வவுனியா)

வடமாகாணத்தில் முதல் முறையாக போரினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்கும், வீடுகளை இழந்தவர்களுக்கும் நட்டஈடு வழங்கப் பட்டிருக்கின்றது.



வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த முந்நூறுக்கும் மேற்பட்டவர்களுக்கு நட்டஈட்டுககான காசோலைகளை

20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அத்துமீறிய கடற்றொழிலை கட்டுப்படுத்த வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் வேண்டுகோள் விடப்பட்டது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுக்காலை 9 மணியளவில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது. இதில் யாழ்.மாவட்ட மீன்பிடி நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டபோது கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை, இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க எவரும் முன்வரவில்லை. இதனால் இலங்கையின் குறிப்பாக வடபகுதி மீனவர்கள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

இந்திய மீனவர்களின் ரோலர் படகுகளின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துமாறு பலமுறை கோரிக்கை விடப்பட்டுள்ளது. இருப்பினும் அதனைத் தடுக்க எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையைக் கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இதற்கு பதிலளிக்கும் முகமாக கருத்து தெரிவித்த அமைச்சர், இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கைக்கு வருகை தந்தபோதும் இதற்கு முன்பும் பலமுறை வலியுறுத்தியிருந்தோம். அத்தோடு இருநாட்டு மீனவர்களையும் சந்தித்து கலந்துரையாட வைக்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை நெடுந்தீவு உள்ளிட்ட கடற்பகுதியில் ஏனைய பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் அத்துமீறி தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதால் அந்தப் பகுதி மீனவர்கள் பாதிக்கப்படுவதாக யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.கணேசமூர்த்தி குற்றம் சாட்டினார்.

அத்தோடு மாதகல் பகுதியில் இறங்குதுறை பகுதியை அண்மித்த பகுதியில் படைத்தரப்பினர் முகாம் அமைத்து வருவதனால் மீனவர்கள் பாதிப்படைவதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு யாழ். மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டதோடு அழிக்கப்பட்டு வரும் கடல்வாழ் உயிரினங்கள் தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. (செ-6)


## தவறிவிட்டது

நல்லதம்பி பத்மநாதன் என்பவரின் 610343155V எனும் இலக்கமுடைய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் உரும்பிராய் மேற்கு மூன்று கோயிலடியில் கடந்த 17 ஆம் திகதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**சிந்துஜன் மெகா சவுண்ட்ஸ்,**
**வைத்தீஸ்வரா வீதி, உரும்பிராய் மேற்கு,**
**உரும்பிராய்.**
**S.T.சிவகுமார் - 0779046178**
(4534)

## விற்பனையாகின்றன

கமநல திணைக்களத்தின் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் தெரிவு பரீட்சை வழிகாட்டி விலை 300/-

தொகுப்பு: த.தவசேகர்

பூபாலசிங்கம், அன்னை, லங்கா, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, ஜோதி, கவிதா, கஜன் புத்தக நிலையங்களில் பெறலாம்.

இப்பரீட்சைக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன.

விபரங்களுக்கு: 0754164564
(4530)

## பிள்ளையார் இன்

எமது உணவகத்தில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு தரமான சைவ/அசைவ உணவுகள் நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன.

விசேட உணவுகள்

- மசாலா தோசை (உருளைக்கிழங்கு கறியுடன்) 120/- மட்டுமே.
- தோசை/பூரி/சப்பாத்தி (உருளைக்கிழங்கு கறியுடன்) 80/- மட்டுமே.

இன்று முதல் மாலை 6 மணி முதல் 10 மணி வரை விசேட உணவுகள்

- மரக்கறி புரியாணி/பிரைட் ரைஸ் - 200/- மட்டுமே
- சிக்கன் புரியாணி - 300/- மட்டுமே
- சிக்கன்பிரைட் ரைஸ் - 250/- மட்டுமே

**தொடர்புகளுக்கு:**
**31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 2829**
(சி-5511)

## பிள்ளையார் இன்

தினமும் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு மதிய உணவு 11.30 மணி தொடக்கம் 3 மணிவரை நிறைவான சேவையுடன் வழங்கப்படுகின்றன.

- சைவ உணவு - 150/- மட்டுமே
- அசைவ (கோழி) உணவு - 180/- மட்டுமே

**தொடர்புகளுக்கு: 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 2829**
(சி-5511)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P: 021 321 0815,
021 567 1532



## மாவையின் கோரிக்கை நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தை ஒத்திவைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவினால் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் விடுக்கப்பட்ட வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதோடு திட்டமிட்டபடி நேற்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (செ-6)

## மரண அறிவித்தல்

### நாகர் கார்த்தியேசு



நிற்சாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் கார்த்தியேசு நேற்று (19.11.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


**நிற்சாமம்,**
**சங்கானை.**

**தொடர்பு: கண்ணன்**
**0774965386**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
(4536)

---

**20.11.2013 இன்று திருக்கடையூரில் ஷஷ்டியப்தபூர்த்திகாணும்**
**திரு.இராசையா குகதாசன்**
**திருமதி.குகதாசன் புவனேஸ்வரி**
**மணிவிழாத்தம்பதியரை மனமுவந்துவாழ்த்துகிறோம்**



**இறையருளால் வாழியநீர் பன்னூறாண்டே**

அருந்"தெய்வத் தமிழிசைக் கவிஞர்"என்றே
அருள்மாவை ஷண்முகனார் அன்பாய் வாழ்த்த
பெருந்"தெய்வப் புகழிசைவா ரிதி"யாமென்றே
புலவரவர் கந்தசாமி பொலிவாய் வாழ்த்த
வருந்திருவெம் "அருட்கவிச் செல்வர்" என்றே
வயித்தீசு வரக்குருக்கள் வரமாய் வாழ்த்த
கரும்புநிகர் நாவலரின் கவிதை போற்றி
"காலத்தா லழியாத கம்பன்" என்றே
பெரும்புலவர் வை.க.சிற்றம் பலனார் வாழ்த்த
புவியரசின் "சமாதான நீதி பதி"யாய்
திருந்திடுமெம் "தேசபந்து" "தேசப் பிரேமி"
திகழ்"ஜனதா புத்ர"னொடு "தேச மான்ய"
பொருந்திவரு சற்"சமூக திலகம்" என்றே
பெருவிருது தரபுவனேஸ் வரியி னோடு
இரும்புவியில் மணிவிழாக் காணும் வேந்தே
இறையருளால் வாழியநீர் பன்னூா றாண்டே

நாயன்மார்கட்டு
யாழ்ப்பாணம்.

நண்பர்கள்,கவிஞர்கள்,அன்பர்கள்
உறவினர்,மக்கள்,மருமக்கள்.
(சி-5517)

## மரண அறிவித்தல்

### திருநாவுக்கரசு கணேசலிங்கம் (லண்டன்)

**(இன்டஸ்றியல் கணேசன்)**



கண்டாவத்தை, அல்வாயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட **திருநாவுக்கரசு கணேசலிங்கம்** (முன்னாள் உரிமையாளர் கணேசன் இன்டஸ்றியல் அல்வாய்) லண்டனில் 16.11.2013 அன்று காலமானார்.

அன்னார் சரோஜினிதேவியின் (லண்டன்) பாசமிகு கணவரும் சதீஸ் (லண்டன்), சசீலா (லண்டன்), கவிதா (லண்டன்), விஜி (சுவிஸ்), சுஜி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுயா (லண்டன்), சூரியகுமார் (லண்டன்), மகி (லண்டன்), விமல் (சுவிஸ்), சுரேன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் பரமேஸ்வரி (ஓய்வுநிலை அதிபர்), செல்வராசா (கனடா-ஓய்வு பெற்ற CTB நடத்துநர்), பத்மாவதி ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 23.11.2013 அன்று லண்டனில் நடைபெறும். இத்தகவலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அல்வாய் தெற்கு,**
**அல்வாய்.**
**0212263934**

**தகவல்:**
**இ.பொன்னம்பலம் (மைத்துனர்)**
**குடும்பம்**
(சி-5516)

## இன்று ஒரு தகவல்

### பக்தி போகிற பாதை!

ஓர் ஊரிலே ஒரு சந்நியாசி இருந்தார்.

அவர் ஒருநாள் ஒரு கனவு கண்டாராம். அந்தக் கனவிலே அவர் சொர்க்கத்திற்குப் போகிறார். அங்கே ஒரு பெரிய திருவிழா நடந்து கொண்டிருக்கிறது.

எங்கே பார்த்தாலும் அலங்கார வளைவுகள்... வண்ண மயமான விளக்குகள்... பாதைகள் பூராகவும் மலர்கள்... எல்லா கட்டடங்களும் ஒளிமயம்.

இவ்வளவு கோலாகலமாக... பிரம்மாண்டமாக அந்தத் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அது என்ன திருவிழா என்பது இந்தச் சந்நியாசிக்குப் புரியவில்லை. அங்கே எதிரில் வந்து கொண்டிருந்தவரை நிறுத்தி, "என்ன விசேடம் இங்கே?" என்று விசாரித்தார்.

"உனக்குத் தெரியாதா இந்த விடயம். இன்று இறைவனுக்குப் பிறந்த தினம்... அதைத்தான் எல்லோரும் சேர்ந்து கொண்டாடுகிறோம். இதற்காக பிரமாண்டமான ஊர்வலம் ஒன்று வரப்போகிறது. இறைவனே அந்த ஊர்வலத்திலே கலந்து கொள்கிறார்!"

உடனே அந்தச் சந்நியாசி ஒரு மரத்து நிழலிலே ஒதுங்கி நின்றார்.

ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. ஒரு மதத்தின் பேரைச் சொல்லி... "இவர் அந்த மதத்தின் தலைவர். அவரைப் பின்பற்றுகிற மக்கள் கூட்டம் பின்னால் வந்து கொண்டிருக்கிறது" என்ற விபரம் சொன்னார்கள்.

இப்படியாக ஒவ்வொரு கூட்டமும் ஒலிபெருக்கி மூலம் சொல்லிக் கொண்டு சந்நியாசியைக் கடந்து போனார்கள்.

அதன்பின், சிறிது நேரம் செல்ல ஒரு வயதான ஆள் குதிரை மேலே வந்துகொண்டிருந்தார்.

ஆனால், அவருக்குப் பின்னால் யாருமேயில்லை. அவர் பரிதாபமாகத் தனியாக வந்து கொண்டிருந்தார்.

"இவர் யார்?... இவர் ஏன் இப்படி தனியாக வந்து கொண்டிருக்கிறார்" என்று அந்த சந்நியாசி கேட்டார்.

"என்ன இப்படி கேட்கிறீர்கள்... இவர்தான் கடவுள்... இவருக்குத்தான் இன்றைக்குப் பிறந்தநாள்..."

இதைக் கேட்டதும் அந்த சந்நியாசி திகிலுற்றார். இதுவரைக்கும் கனவு கண்டு கொண்டிருந்தவர் விழித்துக் கொண்டார். அதன்பின் யோசித்துப் பார்த்தார் உண்மைதான்.

மக்கள் எல்லோரும் பக்தி மார்க்கத்திலே போகிறதாக நினைத்துக் கொண்டு பாதை மாறி போய்க்கொண்டு இருக்கிறார்கள்... கடவுளை பின்பற்றுவதாக நினைக்கிறார்கள் பக்தர்கள். ஆனால், கடவுளுக்குப் பின்னால் யாருமேயில்லை.

இன்னமும் இயல்பாக இதைப் பற்றி யோசித்துப் பார்த்தால், உண்மைக்குப் பின்னாடிதான் நாம் போய்க் கொண்டிருக்கிறோம் என்று அதிகமானவர்கள் சொல்கிறார்கள். ஆனால், அந்த உண்மை அநாதையாக போய்க் கொண்டிருக்கிறது. அப்படியாக மாறிவிட்டது உலகம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அரசியல் தீர்வில் தென்னாபிரிக்காவின் ஆர்வம் தொடர்பில் பரிசீலிக்க தயார்!

## தமிழ்க்கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து தென்னாபிரிக்கா காட்டும் ஆர்வம் குறித்து பரிசீலிக்கத் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அத்துடன், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பது தொடர்பில் முனைப்புக்களை மேற்கொண்டு வரும் இந்தியா மற்றும் நாடுகளுடனும் இது தொடர்பில் ஆலோசிக்கப்படும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவை கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையில், இலங்கையில் நீண்டகாலமாக தீர்வு காணப்படாதிருந்துவரும் இனப்பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என தென்னாபிரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போரினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றவும், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் தென்னாபிரிக்கா தயாராகவுள்ளதாக அந்நாட்டின் ஜனாதிபதி ஜேக்கப் சூமா தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா மிகவும் ஆழமானதும், சிக்கலானதுமான மோதல்களை சந்தித்துள்ளது என்றும், பேச்சுவார்த்தைகள் மூலம் பொறிமுறைகளை உருவாக்கி தமது நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டுள்ளதாகவும் இலங்கை ஜனாதிபதியுடன் இணைந்து நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை, இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு காலஅவகாசம் தேவை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையின அரசியல்சாசனத்துக்கு அமையவே இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிகட்டப் போரின் போது மேற கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பிலான கரிசனைக்குரிய விவகாரங்களுக்கு பதிலளிக்கும் வகையில் உண்மையை கண்டறியும் நல்லிணக்க ஆணைக் குழுவை அமைப்பது குறித்து அரசாங்கத்துக்கு தென்னாபிரிக்கா பரிந்துரைததுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## எனது ஆட்சிக் காலத்தில் இவ்வளவு குற்றச்சாட்டுக்களில்லை- சந்திரிகா

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கை தொடர்பில் கருத்து வெளியிட முடியாது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கத்திற்கு நாம் ஆலோசனை வழங்க முடியாது. அவ்வாறு செய்தால் எமக்கு எதிரான குற்றச்சாட்டுகளையே அவர்கள் முன்வைப்பர்.

எனது ஆட்சிக் காலப்பகுதியில் மனித உரிமை மீறல் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தப்படவில்லை.

கிரிசாந்தி குமாரசுவாமி என்ற யுவதி பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்ட சம்பவம் மட்டுமே அப்போது பதிவாகியிருந்தது. அந்த குற்றச்சாட்டுடன் தொடர்புடைய படை வீரர்களும் தண்டிக்கப்பட்டனர்.

நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற காலத்தில் 90 வீதமான வடக்கின் அதிகாரத்தை புலிகள் கொண்டிருந்தனர். அதில் 75 வீதத்தை எனது ஆட்சிக் காலத்திலேயே மீட்டிருந்தேன்.

இந்த அரசாங்கம் 25 வீதமான பகுதியை மட்டுமே மீட்டுள்ளது.

பத்து ஆண்டுகளுக்கு மேல் நாட்டை ஆட்சி செய்தவர் என்ற ரீதியில் மனித உரிமை, நல்லாட்சி மற்றும் ஊடக சுதந்திரம் போனறன மிகவும் அவசியமானவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 40 - 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 - 160 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 100 |
| தக்காளி | 50 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 30 | 20 | 50 |
| கரட் | 40 | 50 | 80 |
| பூசணி | 30 | 30 | 60 |
| புடோல் | 20 | 40 | 70 |
| வாழைக்காய் | 40 | 30 | 60 |
| சின்ன வெங்காயம் | 240 | 250 | 140 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 60 | 90 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 50 |
| பயற்றங்காய் | 30 | 40 | 80 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 20 | 20 | 40 |
| கறிமிளகாய் | 110 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 60 | 60 |
| போஞ்சி | 100 | 90 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 180 | 120 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 35 - 45 |

## இராசி பலன்

*20.11.2013*

*(கார்த்திகை 04, புதன்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*

*திருதியை பின்னிரவு 1.24 மணிவரை*

*மிருகசீரிடம் மாலை 6.11 மணிவரை*

*இராகுகாலம் 12.09-1.39 மணிவரை*

*சுபநேரம் 4.39-6.09 மணிவரை*

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, பகையொன்று நட்பாகலாம்.

**இடபம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**மிதுனம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், சயன சுகக் குறைவுகள் ஏற்படும், சுபகாரியச் செலவுகள் கூடும்.

**சிங்கம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானத்தை அதிகரிக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், நண்பர்கள் சந்திப்புண்டு.

**கன்னி** ஆடம்பரப் பொருட்களில் நாட்டம் காட்டுவீர்கள், காலை நேரத்திலேயே சுப செய்திகள் வந்து சேரலாம், தொழில் முன்னேற்றம் கருதி பெரிதும் பாடுபடுவீர்கள்.

**துலாம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், வெளியூர்ப் பயணங்களால் ஆதாயமுண்டு.

**விருச்சிகம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**தனுசு** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம், வெளியூர்ப் பயணமொன்றால் ஆதாயம் கிடைக்கலாம், போட்டியாக செயற்பட்ட நண்பர்கள் மனம் மாறுவர்.

**மகரம்** உடல்நலம் சீராகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கும்பம்** பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

வளவன்

# மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு


(மானிப்பாய்)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை தயார்படுத்தும் முகமாக சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும் சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தொடர் இலவச கல்விக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

இதன்படி, 4 ஆவது கருத்தரங்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் இன்றும் நாளையும் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

இக் கருத்தரங்கின் ஆரம்ப நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன், சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் வேல்முருகன், கௌரவ விருந்தினர்களாக இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலய அதிபர் அருட் சகோதரி ஜெயநாயகி ,தெல்லிப்பளை பிரதேச இளைஞர் சேவை அதிகாரி சபேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் இன்று புதன்கிழமை கணித பாடத்திற்கான செயலமர்வும் நாளை வியாழக்கிழமை விஞ்ஞான பாடத்திற்கான செயலமர்வும் இடம்பெறவுள்ளன. (அ-9-23)




# தேசிய வாசிப்புமாத இறுதிநாள் நிகழ்வு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் கீழுள்ள நுணாவில் பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வும் பரிசளிப்பும் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நகராட்சி மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன், சாவ.டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக நகராட்சி மன்ற உறுப்பினர்கள் க.மயில்வாகனம், த.சுதர்ஷன், ந.திருக்குமரன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கலும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦ ✦

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் கீழ் இயங்கும் சாவகச்சேரி பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாளும் பரி சளிப்பு விழாவும் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நூலக மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

மன்றத் தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளையின் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க. அருந்தவபாலன் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட நிகழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளதோடு மாணவர்களது கலை நிகழ்வுகளும் நடை பெறவுள்ளன. (அ-9-29)

# பிரிட்டன் பிரதமரிடம் பிரச்சினைகளை எடுத்துக் கூறிய மக்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகை தந்த பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனிடம் பிரச்சினைகளை எடுத்துக் கூறிய மக்கள் சிலர் இனந்தெரியாத சிலரால் அச்சுறுத்தப்படுவதாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

யாழ். வந்த பிரதமர் யாழ். பொது நூலகத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்கினேஸ்வரனை சந்தித்த பின்னர் சுன்னாகத்திலுள்ள கனக சபாதிப்பிள்ளை முகாமிற்கும் சென்று அங்குள்ள மக்களோடு உரையாடி அவர்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்துள்ளார்.

இதன்போது இராணுவத்தின் காணி அபகரிப்பு அடக்குமுறை அபிவிருத்தியின்மை அரச அதிகாரிகளின் கவனிப்பின்மை என அனைத்தையும் மக்கள் பிரதமரிடம் கண்ணீருடன் கூறியிருந்ததோடு தங்கள் நிலங்களை மீட்டுத்தர உதவுமாறும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது அவ்விடத்தில் காணப்பட்ட சிலர் பிரதமரிடம் உரையாடிய மக்களையும் செய்தியாளர்களை தமது கைத்தொலைபேசிகளில் படம் பிடித்தவண்ணமிருந்தனர்.

இதன்போது தம்மைப் படம் பிடிக்கக் காரணம் என்னவென ஊடகவியலாளர்கள் அவர்களிடம் வினவிய போதிலும் அவர்கள் ஊடகவியலாளர்களை மிரட்டும் வகையில் செயற்பட்டனர்.

இவ்வாறு பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தமது பிரச்சினை தொடர்பில் எடுத்துக் கூறிய மக்கள் தற்பொழுது இனந்தெரியாத சிலரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேபோன்று சனல் 4 ஊடகவியலாளர்களிடம் தொடர்பினை ஏற்படுத்தியவர்களும் கண்காணிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்த ஐ.நாவின் மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் தமது பிரச்சினைகளை எடுத்துக் கூறிய மக்கள் அச்சுறுத்தப்பட்டிருந்ததோடு அவரை சந்தித்து உரையாடிய மக்கள் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் ஆணையாளர் கரிசனை கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-4)




# நயினாதீவு பிரதேசத்துக்கு பேருந்து கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

நயினைதீவு பிரதேசத்தின் உள்ளூர் போக்குவரத்துக்கென இ.போ.ச பேருந்து ஒன்று பிரதேச மக்களிடம் கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சின்னையா சிவராசா நயினாதீவு மக்களைச் சந்திக்க சென்ற வேளை, நயினாதீவு பிரதேசத்துக்கு புதிய பேருந்து ஒன்றைப் பெற்றுத் தருமாறு அவரிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர்.

இதன்படி தவிசாளர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு வந்ததைத் தொடர்ந்து போக்குவரத்து அமைச்சரின் சிபார்சின்படி நயினாதீவுக்கு இந்த இ.போ.ச பேருந்து ஒன்று கையளிக்கப்பட்டது.

நயினாதீவுக்கு பேருந்தைக் கொண்டு செல்வதற்கு உரிய வசதிகள் இன்மையால் பல மாதங்களின் பின்னர் நயினாதீவுக்கு தற்போது அமைக்கப்பட்டு வருகின்ற கடற்பாதையினூடாக எடுத்து விடப்பட்டு அது கடந்த சனிக்கிழமை பிரதேச மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (அ-9)




யாழ். பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கத்தினால் நடத்தப்பட்ட நீதம் மலர் வெளியீட்டு நிகழ்வு மற்றும் கலை விழா என்பன அண்மையில் நடைபெற்றன. இந்நூல் வெளியீட்டு நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நூலின் முதற்பிரதியை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் பெற்றுக் கொள்வதையும் பாடசாலைகளிற்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

# வெலிக்கடை மோதல் விசாரணை அறிக்கை விரைவில் வெளியாகும்

(கொழும்பு)

வெலிக்கடை சிறை மோதல் தொடர்பில் விசாரணை செய்த மூவர் அடங்கிய குழுவின் பரிந்துரைகளை எதிர்வரும் வாரம் ஊடகங்களுக்கு வெளியிட தயார் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அறிக்கை பரிந்துரைகளை பிரச்சினை இன்றி இணக்கப்பாட்டுடன் செயற்படுத்த முடியும் என அமைச்சின் செயலாளர் எஸ். வித்தானகே தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற இம்மோதலில் 27 சிறைக்கைதிகள் கொல்லப்பட்டனர்.

இது குறித்து விசாரணை செய்ய ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பந்துல அத்தபத்து தலைமையில் மூவர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது.

விசாரணை அறிக்கை கடந்த மாதம் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

ஆனால், மூவர் அடங்கிய குழுவில் இருந்த ஒருவர் பரிந்துரைகளில் சிலவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தமையால் அறிக்கையில் திருத்தம் செய்யப்பட்டது.

அதன்படி கடந்த 12 ஆம் திகதி புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலைமையில் கூடிய மூவர் அடங்கிய விசாரணை ஒரு பொது இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளது. எனவே, விசாரணை அறிக்கையின் பரிந்துரை அடுத்த வாரம் ஊடகங்களுக்கு வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# சித்த மருத்துவ மாநாட்டுக்கான ஆய்வுக் கட்டுரை கோரப்படுகின்றன

(யாழ்ப்பாணம்)

2014 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள சித்த மருத்துவ மாநாட்டுக்காக சித்த ஆயுர்வேத,யுனானி மருத்துவர்கள், பாரம்பரிய மருத்துவர்கள் மற்றும் சுதேச மருத்துவம் சார் ஆர்வலர்களிடமிருந்து சுதேச மருத்துவர்சார் ஆய்வுக் கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுவதாக வடமாகாண சுதேச மருத்துவ திணைக்கள ஆணையாளர் மருத்துவர் திருமதி சி. துரைரட்ணம் அறிவித்துள்ளார்.

ஆய்வுக் கட்டுரைகளை மாகாண ஆணையாளர், சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம், சுகாதார கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

சித்த மருத்துவ மாநாடும் கண்காட்சியும் கடந்த வருடம் நவக்கிரி அரச மூலிகைத் தோட்டத்தில் நடத்தப்பட்டது. இவ்வாறான மாநாடு வருடாந்தம் மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# இந்திய மீனவர்களுக்கு மீண்டும் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் 30 பேரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய புதுக்கோட்டை ஜனதாப்பட்டினம் மற்றும் இராமேஸ்வரம் பகுதியிலிருந்து 7 படகுகளில் வந்த 30 மீனவர்கள் கடந்த 4 ஆம் திகதி இரவு காங்கேசன்துறை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறைபொலிஸாரிடம்ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

மேற்படி 30 மீனவர்களையும் பொலிஸாரிடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்ட யாழ். நீரியல் வளத்திணைக்களத்தினர் மீனவர்கள் கைது செய்யப்பட்ட மறுதினம் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது வழக்கை விசாரணை செய்த மல்லாகம் நீதவான் 30 மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றைய தினம் மன்றில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மீண்டும் குறித்த 30 இந்திய மீனவர்களையும் 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார். (அ-4)

# பாலியல் வன்புணர்வு; நபருக்கு 22 ஆண்டுகள் சிறைவாசம்

பொலிஸ் அதிகாரியின் மனைவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய நபருக்கு 22 ஆண்டு கள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் அதிகாரி ஒருவரின் மனைவியை பலவந்தமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஒருவருக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றம் 22 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளமையால், குற்றவாளிக்கு 22 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளிப்பதாக நீதிபதி தம்மிக்க கலேபொல தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் வன்னியன்குளம் பிரதேசத்தை சேர்ந்த 32 வயதான நபருக்கே இந்த சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மேலும் இவருக்கு மூவாயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிபதி, அதனை செலுத்த தவறின் மேலும் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் 17 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த நாள் ஒன்றில் இந்த குற்றம் நிகழ்ந்துள்ளதாக கூறி குற்றவாளிக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் மூன்று குற்றப் பத்திரிகைகளை தாக்கல் செய்திருந்தது. (அ-2)

# யாழ். தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் நாவலர் விழா

(மானிப்பாய்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினரால் முன்னெடுக்கப்படவுள்ள நாவலர் விழா எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.தமிழ்ச் சங்கத்தின் உப தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில், கனகசபை அருள்நேசன் தம்பதியர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.

தொடர்ந்து, கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் திரும்தி விஜயதர்சினி தயாளனின் தெய்வ வணக்கம் இடம்பெறவுள்ளது. வரவேற்புரையை தமிழ்ச் சங்கப் பொருளாளர் ச.லலீசனும் தொடக்கவுரையை தமிழ்ச் சங்கத் தலைவர் தி.வேல்நம்பியும் ஆற்றவுள்ளனர்.

நாவலரும் தமிழ்த்தேசியமும் என்ற பொருளில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் செ.திருநாவுக்கரசு சிறப்புரையும் யாழ். பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.ஸ்ரீதர்ஷனின் நாவலர் இசையரங்கும் இடம்பெறவுள்ளது.

நாலரின் கனவை நனவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பது அவரது சமயப் பணிகளா? அல்லது தமிழ்ப்பணிகளா? என்ற தலைப்பில் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் பட்டிமண்டபம் இடம்பெறும். இதில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான தி.செல்வமனோகரன், சி.ரமணன், ஆசிரியர் கு.பாலஷண்முகன், மருத்துவபீட உதவிப் பதிவாளர் இ.சர்வேஸ்வரா ஆகியோர் வாதிகளாகவும் பிரதிவாதிகளாகவும் பங்கேற்கவுள்ளனர்.

(செ-9-23-254)

# நாவலர் குருபூசை தின போட்டிகளின் முடிபுகள்

(மானிப்பாய்)

யாழ்ப்பாண சைவபரிபாலன சபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தையொட்டி நடத்தப்பட்ட பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

பேச்சுப்போட்டி

கீழ்ப்பிரிவு

துசாந்தி விஸ்வநாதன் (வட்டு மத்திய கல்லூரி),மகிழினி உதயசூரியன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), சாயித்தியா செல்வக்குமார் (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

மத்தியபிரிவு

சரணியா அழகசிங்கம் (கிளி/ முக்கொம்பன் அ.த.க பாடசாலை),சங்கவி சிவகுமார் (வட இந்து மகளிர் கல்லூரி), கஜனி இளங்கோ (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

மேற்பிரிவு

தர்சினி பரமேஸ் (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை),தர்ஷா சிவனேந்திரன் (அருணோதயாக் கல்லூரி),லக்ஷனா ஸ்ரீரங்கநாதன் (வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்)

கட்டுரைப் போட்டி

மேற்பிரிவு

கலைச்செல்வி திருச்செல்வம் (மகாஜனாக் கல்லூரி),யுசாந்தி யோகரத்தினம் (கிளி/மத்திய மகா வித்தியாலயம்), பிறேமலதா பிறேமச்சந்திரன் (மு/வித்தியானந்தாக் கல்லூரி)

இம் முறையும் போட்டிகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பலர் பங்குபற்றியுள்ளதாக சைவபரிபாலன சபை யினர் அறிவித்துள்ளனர்.

இப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் குருபூசைத் தினத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. (அ-9-23)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து (V)
நட்சத்திரம்: மகம் 3
கி.பா : 27.5 செவ் 12ல்
தகைமை/தொழில்: O/L /
அமெரிக்கா (Not PR)
தொ.இ: B/2572

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா : 66 செவ் 2 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L /
தொழிற்சாலை (அவுஸ்திரேலியா PR)
தொ.இ: B/2577

பிறப்பு: 1973 இந்து (V)
நட்சத்திரம்: மூலம் 3கி.பா : 38
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L /
பொறியியலாளர் (சுவிஸ் PR)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: B/2574

பிறப்பு: 1982 இந்து (Senku)
நட்சத்திரம்: மகம் 2
கி.பா : 8.5 செவ் 2 ல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L / Nursing Home (லண்டன் - Student Visa)
தொ.இ: B/2580

பிறப்பு: 1979 இந்து (V)
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா : 55 உயரம்: 5'6"
தகைமை/தொழில்: B Com /
நிரந்தர அரச தொழில்
தொ.இ: B/2575

பிறப்பு: 19 இந்து (V)
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா : 23 சூரி செவ் 11
ல்உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L, UNS /
ஏலக்ரோனிக் எஞ்சினியர்
(சிங்கப்பூர்)
எதிர்பார்ப்பு: சைவபோசனம் மட்டும்
தொ.இ: B/2581

பிறப்பு: 1984 இந்து (V)
நட்சத்திரம்: திருவோணம் 1
கி.பா : 5.75 செவ் 4 ல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: BSc (QS) /
Quantity Suvaiyer (டுபாய்)
தொ.இ: B/2576

பிறப்பு: 1974 இந்து (V)
நட்சத்திரம்: சுவாதி 4
கி.பா : 50.5உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L /
சுப்பவைசர் (கனடா PR)
தொ.இ: B/2582

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

# அணுவாயுத உற்பத்தியைக் குறைத்தால் ஈரான்மீதான பொருளாதாரத் தடை நீங்கும்

## அமெ.முடிவுக்கு இஸ்ரேல் கண்டனம்

(ஜெருசலேம்)

**ஈரான் அணுஆயுத உற்பத்தியைக் குறைத்துக்கொள்ளு மாயின் அதன் மீதான பொருளாதாரத் தடைகள் தளர்த்தப்படும் என்ற அமெரிக்காவின் முடிவை இஸ்ரேல் பிரதமர் நெதன் யாஹு" கண்டித்துள்ளார்.**

ஈரான் நாடு அணு ஆயுத உற்பத்தியை கட்டுப்படுத்த வேண்டும். மறுத்தால் அதன் மீது பொருளாதார தடைகள் விதிக்கப்படும் என உலக நாடுகள் எச்சரிக்கை விடுத்தன. இதனையடுத்து உலக நாடுகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்த ஈரான் சம்மதித்தது.

இந்நிலையில் ஐ.நாவின் அணு ஆயுத ஒழிப்பு ஒப்பந்தத்தில் ஈரான் கையெழுத்திட வேண்டும் என்று உலக நாடுகள் நெருக்கடி கொடுத்து வருகின்றன.

ஐ.நா நிபுணர்கள் ஈரானில் அணு ஆயுத உற்பத்தி தொடர்பாக சோதனை நடத்த வேண்டும் என நிர்பந்தம் செய்தனர். இதற்கு ஈரான் அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. ஈரானின் இந்த முடிவை சீனா வரவேற்றுள்ளது. இதனையடுத்து ஈரான் அணு ஆயுத உற்பத்தியை குறைத்துக் கொண்டால் அதன் மீதான பொருளாதார தடைகளை குறைத்துக் கொள்ள அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் இந்த முடிவுக்கு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாஹு"கண்டனம் தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி வெளளிக்கிழமை இஸ்ரேல் செல்கிறார்.




அங்கு பிரதமர் நெதன்யாஹு"வை சந்தித்து ஈரான் அணு ஆயுத விவகாரம் குறித்து ஆலோசனை நடத்துவார். இதுகுறித்து நெதன் யாஹு" கூறுகையில்,

ஈரான் மீதான பொருளாதார தடைகள் மீது தளர்வு செய்யவதான அமெரிக்காவின் முடிவு குறித்து ஆலோசனை நடத்துகிறோம்.

இந்த விவகாரம் குறித்து பிரான்ஸ ஜனாதிபதி ஹோலண்டே, ரஷ்ய ஜனாதிபதி புடின் ஆகியோருடனும் ஆலோசனை நடத்துவோம் என்று தெரிவித்தார். (2)

# முஷாரப் மீதான வழக்கை விசாரிக்க நீதிமன்றம் அமைக்குக உயர்நீதிமன்றிடம் பாக்.மனு


(இஸ்லாமாபாத்)



பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப் மீதான, தேசத் துரோக வழக்கு விசாரணையை, நடத்த வசதியாக சிறப்பு நீதிமன் றத்தை அமைக்கும்படி, உயர்நீதி மன்றம் அந்நாட்டு அரசு, மனு அளித் துள்ளது.

முஷாரப் பதவியில் இருந்த போது, கடந்த, 2007இல், தலைமை நீதிபதி உட்பட, 60 நீதிபதிகளை பதவி நீக்கம், செய்து, சிறையில் அடைத்து, அவசர நிலையை பிறப் பித்தார்.

இவரது இந்த செயல், தேசத் துரோக செயலாக குற்றம் சாட்டப் பட்டு, இஸ்லாமாபாத், உயர் நீதிமன் றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கை விரைந்து நடத்துவ தற்கு வசதியாக, சிறப்பு நீதிமன் றத்தை அமைத்து, முஷாரப்புக்கு ஆயுள் சிறையோ, மரண தண்ட னையோ விதிக்க வழி செய்ய வேண்டும்" என, அரசு தரப்பில், உச்ச நீதிமன்ற பதிவாளரிடம் நேற்று முன்தினம் மனு கொடுக் கப்பட்டது. (2)





பாலஸ்தீன நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டபிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயில் ஹோலாண்டே அந்நாட்டு ஜனாதிபதி முகம்மது அப்பாஸை, ரமல்லாஹ் நகரில் வைத்து சந்தித்தைப் படத்தில் காணலாம்.

# இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஈரான் ஆளில்லா விமானம் தயாரிப்பு

(இஸ்ரேல்)

இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஈரான் மிகப்பெரிய ஆளில்லா விமானம் ஒன்றை இராணுவத்தில் இணைக்கவுள்ளதாக ஈரான் அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஈரான் தனது புதியவகை விமானம் ஒன்றை நேற்று காட்சிக்கு வைத்தது. 30 மணி நேரம் வானில் வலம் வரக் கூடிய இந்த மிகப்பெரிய ஆளில்லா விமானம் விரைவில் இராணுவத்தில் சேர்க்கப்படும். அது இஸ்ரேல் வரை சென்று தாக்க வல்லமையுடையதாகும் என்றும் ஈரான் அறிவித்துள்ளது.




ஈரான் விஞ்ஞானிகள் வடிவமைத்து தயாரித்துள்ள இந்த பொட்ராஸ் ஆளில்லா விமானம் 25 ஆயிரம் அடி உயரத்தில் 2ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தாக்குதல் மற்றும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடும் வல்லமை படைத்ததாகும் என்று கூறப்படுகிறது.

ஈரானுக்கு எதிராக பல்வேறு தடைகள் இருந்தும், எமது விஞ் ஞானிகள் வடிவமைத் துள்ள இந்த ஆளில்லா விமானம் ஈரான் இராணுவத்திற்கு அதிக பலம் அதிகரிக்கும் என்றும் ஈரான் கூறியுள்ளது.

ஈரான் அணு ஆயுதங்களை குவித்து வருவதாக இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் குற்றம் சாட்டிவருகின்றன. இதனால், ஈரான் மீது தாக்குதல் நடத்துவோம் என்று இஸ்ரேல் மிரட்டி வரு கிறது. ஈரானுடன் பலகட்ட பேச்சுவார்த்தைகளை அவர்கள் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# முபாரக் மீதான வழக்கு ஒத்திவைப்பு

எகிப்து முன்னாள் ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக் மீதான மறு விசாரணை வழக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இவர் மீதான மற்றைய ஊழல் வழக்குகளின் விசாரணை நடைபெற்று வருவதால் அவர் தொடர்ந்து சிறையில் உள்ளார்.

முபாரக் மீதான வழக்கின் மறுவிசாரணை கெய்ரோ குற்றவியல் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

இதனிடையே, எகிப்தில் நடந்த வன்முறையால் அங்கு அவசர நிலை பிரகடனம் அறிவிக்கப்பட்டு ள்ளதால், முபாரக் விடுதலை செய் யப்பட்டால், அவரை கட்டாய வீட்டுக காவலில் வைக்க பிரதமர் ஹசன் எல் பெப்லாவி உத்தரவிட்டிருந்தார்.

இதனால், விடுதலையான ஹோஸ்னி முபாரக் நேராக இராணுவ மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். பின்னர் அங்கு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள் ளார்.

இந்த வழக்கு நேற்று முன் தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதி பதி அடுத்த விசாரணையை டிசெம் பர் மாதம் 14ஆம்திகதிக்கு ஒத்தி வைத்தார்.

முன்னாள் இராணுவ அமைச்சர் மற்றும் அவரது உதவியாளர் ஆகியோர் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகி சாட் சியம்அளிக்க வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டார். (2)

# சூரியனை கடக்கும் வால்நட்சத்திரம்

(சென்னை)



இந்த நூற்றாண் டின் மிகப் பிரகாசமான ஐசான் வால் நட்சத்திரம் எதிர்வரும் 28 ஆம் திகதி சூரியனை மிக அருகே கடக்கவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதியன்று மாலை 5 மணி முதல் சூரியன் மறையும் வரை இந்த வால்நட்சத்திரம் மிகப் பிரகாசமாக, நீண்ட வாலுடன் வானில் காட்சியளிக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

ஐசான் வால்நட்சத்திரம் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் வெற்றுக் கண்களுக்குத் தெரியும். விடியற்காலையில் சூரியன் உதிப்பதற்கு சற்று முன்னீர் கிழக்கு திசையில் இந்த வால்நட்சத்திரத்தை காணலாம்.

டிசெம்பர் மாதத்தில் சூரிய உதயத்துக்கு முன்பும், சூரியன் மறைவுக்குப் பின்னரும் இதனைப் பார்க்கலாம். டிசெம்பர் மாத கடைசியில் இரவு முழுவதும் இதனைப் பார்த்து ரசிக்கலாம் என தமிழ்நாடு அறிவியல் இயக்கம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் அனைவரும் இந்த வால்நட்சத்திரத்தை பார்க்க வேண்டும். இதனால் எந்தவிதத் தீங்கும் ஏற்படாது என்பதை வலியுறுத்தி பிரசாரத்தையும் இந்த இயக்கம் தொடங்கியுள்ளது.

சூரியனை நெருங்கும் சமயத்தில் அதன் தலை, வால் ஆகிய பகுதிகள் பல்லாயிரம் மடங்கு பெரியதாகவும், பிரகாசமாகவும் காணப்படும்.

இது சூரியனை மிக நெருங்குவதால் வெப்பத்தாலும், ஈர்ப்பு விசையாலும் பாதிக்கப்படலாம் என நம்பப்படுகிறது.

ஐசான் வால்நட்சத்திரம் பூமியின் சுற்றுப்பாதையை விட்டு வெகு தொலைவில் செல்வதால் பூமியில் மோதுவதற்கு வாய்ப்பில்லை என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். (2)

# பிணைமனு கோரி உயர்நீதிமன்றில் பழ.நெடுமாறன் மனுத்தாக்கல்


(மதுரை)

முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றம் விவகாரம் தொடர்பாக மதுரை உயர் நீதிமன்றக் கிளையல் பழ.நெடுமாறன் உட்பட 85 பேர் பிணைகேட்டு மனுததாக்கல் செய்துள்ளனர்.

இலங்கையின் இறுதிக்கட்ட போரில கொல்லப்பட்ட அப்பாவி தமிழர்களின் நினைவாக தஞ்சாவூர் விளார் பகுதியில் முள்ளிவாய்ககால் நினைவு முற்றம் அமைக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் அமைக்கப்பட்ட பகுதி நெடுஞ் சாலைத் துறைக்கு சொந்தமானது என கூறப் பட்டது.

நெடுஞ்சாலைத்துறை இடத்தை ஆக்கிரமித்து நினைவுமுற்றம் கட்டப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டு அதனை இடித்து அகற்றினர். இதனால அங்கு பதற்றம் ஏற்பட்டது.



இதற்கிடையில் பொலிஸ் விதிகளை மீறி இரவு 10 மணிக்கு மேல் அங்கு ஒலி பெருக்கி பயன்படுத்தியதாக உலக தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடு மாறன் உடபட 85 பேர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்த வழக்கின் அடிப்படையில் பழ.நெடுமாறன் உட்பட 85 பேர்கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்களை விடுதலை செய்ய வேண்டுமென ம.தி. மு.க. உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந் நிலையில் கைதான 85 பேர் சார்பில் பிணை கேட்டு தஞ்சாவூர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்ய பட்டது. ஆனால் அந்த மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.

இதனை தொடர்ந்து மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் பழ. நெடுமாறன் உடபட 85 பேர் சார்பில் பிணை கேட்டு மனுத்தாக்கல் செய்யபபட்டகு. (2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## கற்றாழை

Botanical Name-Aloe Vera
Family- Liliaceae
Engl-Aloes
Sinh-Komarika

பல பருவங்கள் வாழக்கூடிய குறுஞ் செடி; இலைகள் தரையினை ஒட்டி ரோசா இதழ்கள் போன்று கொத்தாகக் காணப் படும். சதைப்பற்று மிகுந்தவை. அடி அகன்று நுனி குறுகியுள்ளது. விளிம்பில் கீழ்நோக்கிய முட்கள் உண்டு. இளம்பச்சை நிறமும் வெண்மைப்புள்ளிகளும் கொண்டுள்ளன. மலர்கள் நீளமாக மஞ்சரிக் காம்பில் தோன் றும் மஞ்சள் அல்லது செம்மஞ் சள் நிறம் கொண்டவை. கற் றாழை என்று பொதுவாகக் கூறும் போது பலவகைக் கற்றாழைகள் இருப்பதால் இதன் காரணப் பெய ராக இதன் இதழின் உள்ளே சோறு போன்று பதார்த்தம் உள்ள தால் சோற்றுக் கற்றாழை என்ற பெயராலேயே அழைக்கப் படுகிறது.

### வளரியல்பும் பரம்பலும்

வெப்ப மண்டலப் பகுதிகளில் வளர்கின்றது. யாழ்ப்பாணத்தில் கடற்கரையோரங்களில் இயற் கையாகவே பரம்பிக் காணப்படுகின்றது. வல்லைவெளி, அல்லைப்பிட்டிச் சந்தி, கைதடி போன்ற இடங்களில் பரம்பல் அதிகம். இதன் இலைக்காக இந்தியாவில் பயிரிடப்பட்டு வளர்க்கப்படுகின்றது. இத் தாவரத்தின் வேருடன் கூடிய சிறிய பகு தியினை ( Planet let) உடைத்து எடுத்து தருவது வழக்கம். எனவே அரிதாகவே விதைகள் காணப்படும்.

### மருத்துவப் பயன்கள்

✦ தோலினைப் பாதுகாத்து குறிப்பாக முகத்தினை அழகுபடுத்தும். பழங்காலந் தொட்டே அழகு சாதனமாகப் பயன்பட்டு வருகின்றது.

✦ சாதாரணமாக கற்றாழையின் சோற்றை எடுத்து நன்றாகக் கழுவிவிட்டு அதோடு பனங்கற்கண்டு சேர்த்து உஷ்ண வியாதி களுக்கு சாப்பிடுவது நாட்டுப்புற வழக்கம். இதனால் உடல் உஷ்ணம் நீங்குவதோடு உடலில் தோன்றும் அரிப்பு,சிறு நீரில் காணும் எரிச்சல் முதலியவை நீங்கும்.

✦ சிறிது கற்றாழைச் சோற்றை எடுத்து அவரவர் தேய்க்கும் எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சித் தேய்த்து வந்தால் முடி நன்றாக வளரும். இதே எண்ணெயில் தலைமுழுகி வர கண் குளிர்ச்சியும் சுகந்திரையும் உண் டாகும்.

✦ 350 மில்லி லீற்றர் ஆமணக்கெண் ணெயில் சுமார் 3 கிராம் கற்றாழைச் சோற்றை ஊறவைத்து அரைத்துக் காய்ச்சி நீர்ச்சத்து மாறியவுடன் இறக்கி வைத்





துக் கொண்டு காலை, மாலை வேளைகளில் ஒரு தேக்கரண்டி வீதம் சாப்பிட்டு வர உடல் அனல் மாறி மேனி பளபளப்பாக தோன்றும். கல்லீரல் ஆரோக்கியமாக விளங்கும். நீண்ட கால மலச்சிக்கல் கூட நீங்கும். இந்த எண் ணெயைப் பெண்கள் சாப்பிட்டு வந்தால் மாதவிலக்கு ஒழுங்காகும். ஆனால் இவ் வெண்ணெய் கர்ப்பகாலத்தில் பயன்படுத்தக் கூடாது.

✦ இலையின் சோறுடன் வெல்லப்பாகு கலந்து மூலநோய் தீர பயன்படுத்தலாம்.

✦ சோற்றுக்கற்றாழையுடன் பனை வெல் லம் சேர்த்து சாப்பிட சுக்கில நட்டம் தீரும்.

✦ சோற்றுக் கற்றாழைச் சதையும் கொஞ் சம் பனங்கற்கண்டும்கூட்டி ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து காலையில் வெறும் வயிற்றில் மூன்று வாரங்கள் தொடர்ந்து சாப்பிட வயிற் றுப்புண் ஆறும்.

✦ இலைகளில் காணப்படும் ஜெல் காய ங்களைக் குணப்படுத்தும். பித்த நீர் சுரப் பினை ஊக்குவிக்கும். மலமிளக்கி, வீக்கங் களைப் போக்கும் தன்மை கொண்டது.

✦ அமெரிக்கா மற்றும் ரஷ்யாவில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகள் இலை ஜெல்லின் காயங்களை ஆற்றும் பண்பினை உறுதிப் படுத்தியுள்ளன. தீப்புண்கள், நாட்பட்ட காயங் கள் ஆகியவற்றின் மீது ஒரு படலம் போன்று படிந்து பாதுகாக்கிறது. புண் ஆறுவதைத் துரிதப்படுத்துகிறது.

✦ ஜெல்லில் காணப்படும் ஆலோக்டின் B எனும் பொருள் நோய் எதிர்ப்பு சக்தியி னைத் தூண்டிச் செயற்படுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மேலை நாடுகளில் 1950 இற்குப் பிறகே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. பாதிப்பை உண்டு பண்ணும் கதிர்வீச் சுப்புண் களை ஆற்றும் சக்தி கண்டறியப்பட்டுள்ளது. இலையினை உடைத்தால் வெளியேறும் ஜெல்லினை சிறிது படிகாரம் அல்லது கடுக் காய்த்தூள் சேர்த்தால் சாறு நன்கு இறங்கும். இச்சாற்றை புண்கள் மீது தடவலாம். எல்லா வகையான தோல்களிலும் பயன்படும். தோல் இறுக்கத்திற்கு சுகமளிக்கும் மருந்தாகும்.

✦ இலையின் அடிப்படையிலிருந்து கிடைக்கும் மஞ்சள் வண்ணச்சாறு சேகரிக் கப்பட்டு உலர்த்தப்படுகிறது. இதனை சுலோ கசப்பு (Bitter Aloes) என மருந்தாக பயன்படுத்துவர். இதில் சூந்தரோ குயின் னோன்கள் உள்ளன.

✦ இவைமலமிளக்கிபண்பினைக் கொண் டவை. பெருங்குடலை சுருங்க வைத்து மலம் வெளியேற உதவுகின்றன. ஒரு சில துளி ஜீரணத்தை தூண்டும் அதிக அளவு மலமிளக்கி பேதி தூண்டும்.

✦ இதன் சோற்றுடன் நல்லெண்ணெ யும் மஞ்சள் தூளும் சேர்த்து காய்ச்சி மித மான சூட்டில் வீக்கத்துடன் கூடிய மூட்டு வலிக்கு பூசலாம்.

✦ இதனுடைய சாறு பல்வேறுபட்ட மருந் துச் சரக்குகளை சுத்தி செய்வதற்கும் பலவி தமான சித்தமருந்துகளின் அரைப்பிற்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

✦ இலைகளின் கரை முட்களை சீவி,

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

தோலையும் சீவி உள்ளிருக்கும் ஜெல் போன் றதை எடுத்து 7, 8 தண்ணீரில் கழுவி ஒரு சிறிய துண்டை (ஒரு கிராம்) அளவு தினமும் ஒரு வேளை பனங்கட்டி ஒரு துண்டுடன் 3 மாதங்கள் சாப்பிட்டு வர முகம் அழகாகவும் தோல் பளபளப்பாகவும் வருவதுடன் விய ர்வை நாற்றமும் நீங்கும்.

✦ கற்றாழையின் உள்சோற்றை எடு த்து சிறுசிறு துண்டுகளாக நறுக்கி 7, 8 தண்ணீரில் கழுவி 500 கிராம் எடுத்து 11/2 லீற்றர் தயிருடன் கலந்து தேவையானளவு சீனி சேர்த்து மிக்ஸியில் அடித்து பின் சிறிய கப்களில் ஊற்றி தேசிப்புளி சிறிது விட்டுக் குடிக்க மலம் கழியும். உடலுக்கு குளிர்ச்சி யைக் கொடுக்கும். உடல் எரிவைத் தணிக் கும். செயற்கைப் பானங்களுக்குப் பதில் பயன்படுத்தக்கூடிய இயற்கை மென்பான மாகும். சுவையாகவும் இருக்கும்.

✦ கற்றாழைச் சோற்றை எடுத்து நன்கு கழுவி சிறு துண்டுகளாக்கி சிறிதளவு படி காரம் தூவ சாறு இறங்கும். இதனைப் பூசிக் குளித்துவர (சோப்பிற்குப் பதில்) வியர்வை நாற்றம் நீங்கி தோல் மினுமினுப்பாக இருக்கும்.

# ஐப்பசி மாதம் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

அனுபவத்தால் எதையும் கற் றுக்கொள்வீர்கள். எதிலும் பொறு ப்பை ஏற்கத் தயங்கமாட்டீர்கள். சுருதி, யுக்தி, அனுபவம் இவற்றால் சாமர்த்தியமாகவே வாழ்வை நடத் திக் கொள்வீர்கள்.

நீங்கள் சிறுவயதில் கஷ்டப் பட்டாலும் நடுவயதில் வறுமை நீங் கிச் சுதந்திரம் பெற்று வாழ்வின் இறுதியில் மன அமைதியுடன் இரு ப்பீர்கள். நீங்கள் வாழ்க்கையைப் பொதுநலக் கருத்துடனும் தொண்டு செய்யும் சேவை மனப்பான்மை யுடனும் அமைதி யாகவும் நடத்து வீர்கள்.

பொதுவாக உங்களில் பலரு க்கு மாமிச உணவுகளில் விருப் பம் ஏற்படும். புலால் உண்ணக் கூடாத விரதமுள்ள வீர சைவர்களாக இரு ந்தாலுங்கூட சிலருக்கு மாமிசப் பிரியம் ஏற்படுவதும் உண்டு. உங் களுக்கு வாலிபப் பருவத்தில் துறு துறுக்கும் துடிதுடிப்பும் துணிச்ச லும் வயதாக வயதாக அனுபவம் ஏற ஏறச் சகிப்புத் தன்மையாகி வரும். உங்களுக்கு இயற்கையில் ஆன்ம வலினம் குறைவு. சிறிய விவகாரமாக இருந்தாலுங் கூட அதில் தாமாக வலியச் சென்று தலை யிட்டுக்கொள்ள மாட்டீர்கள். சிறுவய தில் சிலர் தந்தையின் ஆதரவை இழக்க நேரிடும். முன்னோர்கள் தேடிவைத்த சொத்துக்களில் அடை யும் இலாபம் அதிகம் இராது.

உங்களிடத்தில் பெருந்தன்மை யும் மன்னிக்கும் இயல்பும் இயற் கையாகவே அமைந்திருக்கும்.சூசக புத்தியினால் பிறர் சூட்சுமமான சூழ் ச்சிகளையும் நீங்கள் எளிதில் புரி ந்து கொண்டு சூழ்ச்சிக்காரர்களிடமே அதைச் சுட்டிக்காட்டி விடுவீர்கள். உங்களுக்குப் பெரும்பாலும் தெய் வீகத்தில் பற்றும் வேதாந்த விடய ங்களில் அக்கறையும் உண்டாகும். எதையும் அகக் கண்ணால் காணும் அதி அற்புத சக்தியும் வந்து சேரும். மற்றவர்களுக்கும் புலனாகாத அதி யற்புத அமானுஷீக விடயங்களும் கண்ணிற்கும் கருத்திற்கும் எட்டாத மிக நுண்ணிய விடயங்களும் உங் களுக்கு எளிதில் தெளிவாகும். உல கத்தின் மிகச் சிறந்த அறிஞர்கள், சிந்தனையாளர்கள், வேதாந்திகள் தத்துவ ஞானிகளின் கருத்துக்களை யெல்லாம் நீங்கள் உய்த்துணர் ந்து விடுவீர்கள்.

உங்களுக்கு நுண்கலைகளில் ஆர்வம் பிறக்கும். இசைஞானம் இயற்கையாகவே அமைந்திருக் கும். உருக்கமான பக்திப்பாடல்கள் இய்ற் றுவதிலும் பாடுவதிலும் உங்க ளுக்கு இயல்பான மனக்களிப்பு உண்டாகும். ஆனால் சங்கீதம் பாடு வதாக நினைத்துக் குரல் இனிமை யின்றி கூச்சல்போடும் பக்தர் பஜனை கோஷ்டிகளை நீங்கள் விரும்ப மாட்டீர்கள்.

உங்களுக்குத் தெய்வபக்தியில் உள்ள பரவசத்தாலும் உண்மை பக் தியாலுமே அருங்கலைகள் அனை த்தும் சிறப்புப் பெறுவதோடு பிறரை வயப்படுத்தும் சக்தியைப் பெறுகின் றன என்பதே உங்கள் கருத்தாக முனையும். நீங்கள் தொழில் துறையில் இலாபம் அதிகமில்லா விட்டாலும் வம்பு வழக்கில்லாத தொழி ல்களையே செய்ய விரும்புவீர்கள். நட்டம் விளையக்கூடியதாகவோ இலாபம் நிறையக் கிடைப்பதாகவோ ஹேஷ்யமாகக் கருதப்படும் வியா பாரத்தில் தலையிட்டுக்கொண்டு தவிக்கமாட்டீர்கள். கண்ணியத்தை யும் நேர்மையையும் கௌரவத்தை யும் காப்பாற்றிக்கொள்வதில் எப்போ துமே அக்கறையாக இருப்பீர்கள். உங்களுக்குப் பின்புறத்தில் குறை சொல்பவர்களும் இழிவாகப் பேசு




பவர்களும் இருப்பார்கள். அவர் கள் உங்களை நேரில் கண்டால் பயந்து பணிந்து மரியாதை செலு த்துவார்கள். துலாக்கோலை சின்ன மாகவுடைய துலாஸ்தானத்தில் பிற ந்த நீங்கள் குணப் பண்பும் அறிவு நுட்பமும் அதிகம் வாய்ந்தவர்களா கையால் ஒழுக்கங்களையும் சட்ட ங்களையும் நடைமுறை ஒழுக் கங்களையும் விரும்புவீர்கள்.

நீங்கள் கண்ணியமாகவும் கௌரவமாகவும் நடந்து கொள் வதால் உங்களுக்குச் சமுதாயத் தில் ஒரு கவர்ச்சி உண்டாகும். சம நீதி, சமதர்மம், பொது நியாயம் பக்ஷ பாதமற்ற நிலையில் தீர்ப்பளித்தல் ஆகியவற்றில் நீங்கள் சிறந்து விளங்குவீர்கள்.

அருங் கலைத் தொழில்களை நிர்வாகஞ் செய்வதிலும் கலைக் கூடங்களை நிர்மாணஞ் செய்வ திலும் நாடகம், நாட்டியம் போன் றவற்றை இயற்றுவதிலும் இயக் குவதிலும் பெரும் இலாபம் அடை வீர்கள்.





# சிறுவர் அரங்கம்

642

## சிறந்த ஓவியம்

“அமைச்சரே! நான் யாரையும் ஏமாற்றவில்லை. என்னைப் போல ஓவியம் வரைந்து தா. ஆயிரம் பணம் தருகிறேன் என்று இவனிடம் சொன்னேன். இவன் வரைந்த ஓவியம் என்னைப் போல இல்லை. அதனால்தான் பணம் தரவில்லை. என்னைப் போலவே ஓவியம் வரைந்து தரச் சொல்லுங்கள். ஆயிரம் பணத்திற்குப் பதில் இரண்டாயிரமே தருகிறேன்,” என்றான் ராஜன்.

“ஓவியம் என்றாலே சிறு சிறு குறைகள் இருக்கத்தானே செய்யும். இது உங்களுக்குத் தெரியாதா?” என்று கேட்டார் பீர்பால்.

“அதெல்லாம் எனக்குத் தெரியாது. என்னைப் போலவே ஓவியம் வரைந்து தரச் சொல்லுங்கள். இரண்டு பங்கு பணம் தருகிறேன். குறை இருந்தால் ஒரு பணமும் தரமாட்டேன்,” என்று அடாவடியாகப் பேசினான் அவன்.

“ஒரு வாரம் சென்று வாருங்கள். உங்களைப் போலவே ஓவியம் இங்கு இருக்கும். அதில் குறை இருந்தால் பணம் தரவேண்டாம்,” என்றார் பீர்பால்.

“அந்த ஓவியத்திலும் எப்படியும் குறை கண்டுபிடித்து பணம் தராமல் தப்பிக்கலாம்” என்று புறப்பட்டான் ராஜன்.

“நீ ஓவியம் ஏதும் வரைய வேண்டாம். அடுத்த வாரம் இங்கு வா. பணத்துடன் செல்லலாம்,” என்றார்.

ஒரு வாரம் சென்றது.

பீர்பாலின் மாளிகைக்கு ஓவியன் முதலில் வந்தான். பிறகு ராஜன் வந்தான்.

“உங்களைப் போலவே வரையப்பட்ட ஓவியம் இது. திரைச் சீலையால் மூடப்பட்டுள்ளது. சீலையை விலக்கிப் பாருங்கள். சிறு குறையும் உங்களால் கண்டுபிடிக்க முடியாது,” என்றார்.

“எப்படியும் வரைந்து இருக்கட்டும். குறை கண்டுபிடித்து விடலாம்” என்று திரையை விலக்கினான் அவன்.

அங்கே அவனைப் போலவே ஓவியம் இருந்தது. ஆனால், அந்த ஓவியம் அசைந்தது. கண்கள் இமைத்தது.



“அது ஓவியம் அல்ல. எதிரே உள்ளவர் வடிவத்தை அப்படியே காட்டும் நிலைக்கண்ணாடி. அதில் தன் வடிவம் தெரிகிறது” என்பது அவனுக்குப் புரிந்தது.

“அமைச்சரே! இது ஓவியம் அல்ல. முகம் பார்க்கும் கணணாடி”என்றான்அவன்.

“கண்ணாடியில்தான் நம் வடிவம் அப்படியே தெரியும். குறை எதுவும் காணமுடியாது. ஓவியம் என்றால் குறைகள் இருக்கத்தான் செய்யும். இந்தக் கண்ணாடியை எடுத்துச் செல்லுங்கள். ஓவியனுக்கு இரண்டாயிரம் பணம் தாருங்கள்,” என்றார் பீர்பால்.

“அமைச்சரே! இது நியாயம் அல்ல!” என்றான் அவன்.

“நியாயத்தைப் பற்றி நீங்கள் பேசாதீர்கள். குறையே இல்லாமல் யாராலும் ஓவியம் வரைய முடியாது. இதை அறிந்த நீங்கள் என்ன செய்தீர்கள்? இந்த ஓவியங்களை எத்தனை முறை வரையச் சொன்னீர்கள்?

நம் வடிவம் கண்ணாடியில்தான் குறை இன்றித் தெரியும். இரண்டாயிரம் பணம் தந்து இதை வாங்கிச் செல்லுங்கள். இல்லையேல் ஏமாற்ற முயன்றதற்குக் கடுமையான தண்டனை கிடைக்கும்.” என்றார் பீர்பால்.

“ஆயிரம் பணம் கொடுத்து அந்த ஓவியத்தையே வாங்கி இருக்கலாம். வீட்டில் அழகாக மாட்டி வைத்து இருக்கலாம். எல்லாரும் பார்த்து மகிழ்ந்து இருப்பர். பத்துப் பணம் பெறாத கண்ணாடி இது. இதற்கு இரண்டாயிரம் பணம் தர வேண்டி வந்ததே” என்று தன்னையே நொந்து கொண்டான் அவன். ஓவியனிடம் இரண்டாயிரம் பணம் தந்தான். அந்தக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு வருத்தத்துடன் சென்றான் பணக்காரன்.

(முற்றும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

11.2013
20

- 284- டயோக்கிளேசியன் உரோமப் பேரரசின் மன்னன் ஆனான்.
- 1194-இத்தாலியின் பலேர்மோ நகரம் ஆறாம் ஹென்றியால் கைப்பற்றப்பட்டது.
- 1658- இலங்கையில் போர்த்துக் கீசர் மீதான வெற்றியைக் குறிக்க இந்நாள் டச்சு ஆட்சியாளர்களினால் நன்றி தெரிவிப்பு நாளாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.
- 1700-சுவீடனின் பன்னிரண்டாம் சாள்ஸ் நோர்வா என்ற இடத்தில் ரஷ்யாவின் முதலாம் பீற்றரைத் தோற்கடித்தான்.
- 1910-பிரான்சிஸ்கோ மடேரோ மெக்சிக்கோ ஜனாதிபதி போர் பீரியோ டயஸ் என்பவரைப் பதவியில் இருந்து அகற்றிவிட்டதாகவும் தன்னை ஜனாதிபதியாகவும் அறிவித்தார். மெக்சிக்கோ புரட்சி ஆரம்பமானது.
- 1917- உக்ரேன் குடியரசாக அறிவிக்கப்பட்டது.
- 1923-ஜேர்மனியின் நாணயம் பேப்பியர் மார்க் ரெண்டென்மார்க் ஆக மாற்றப்பட்டது. (1 டெண்டென்மார்க்- 1 திரில்லியன் பேப்பியர்மார்க்)
- 1936-ஸ்பானிய அரசியல் தலைவர் ஜோசே அண்டோனியோ பிறிமோடெ ரிவேரா கொல்லப்பட்டார்.
- 1940-இரண்டாம் உலகப்போர்: ஹங்கேரி, ருமேனியா, சிலவாக்கிய ஆகியன அச்சு அணி நாடுகள் அமைப்பில் இணைந்தன.
- 1947-இளவரசி வலிசபெத் இளவரசர் பிலிப்பை திருமணம் புரிந்தார்.
- 1962-சோவியத் ஒன்றியம் தனது ஏவுகணைகளை கியூபாவில் இருந்து அகற்றுவதாக வாக்குறுதி அளித்ததை அடுத்து ஐக்கிய அமெரிக்கா கரிபியன் நாட்டுக்கெதிராக கொண்டுவந்த பொருளாதாரத் தடைகளை திரும்பப் பெற்றுக்கொண்டது.
- 1977-ஆறு ஆண்டுகள் சிறைக்குப் பின் ஜனதா விமுக்தி பெரமுன தலைவர் ஹோகண விஜெயவீர விடுதலை செய்யப்பட்டார்.
- 1979-சவுதி அரேபியாவில் மெக்காவில் காபா மசூதியைத் தாக்கிய சுனி முஸ்லிம் ஆயுததாரிகள் 6 ஆயிரம் பொதுமக்களை பணயக் கைதிகளாக்கினர். எனினும் பிரெஞ்சுப் படைகளின் உதவியுடன் இத்தாக்குதல் முறியடிக்கப்பட்டது.
- 1985-மைக்ரோசொஃப்ட்டின் விண்டோஸ் 1.0 வெளியிடப்பட்டது.
- 1988-ராஜிக் காந்திக்கும; மிக்கைல் கோர்பசேவுக்கும் இடையே இரு அணு உலைகளைக் கூடங்குளத்தில் அமைப்பது என்ற ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. எனினும் சோவியத் கலைப்பை அடுத்து இத்திட்டம் கைவிடப்பட்டது.
- 1993-அங்கோலா அரசுக்கும் யுனீட்டா ஆயுதக் குழுவுக்கும் சாம்பியாவில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியதில் 19 ஆண்டு கால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. எனினும் அடுத்த ஆண்டு போர் மீண்டும் ஆரம்பமாயிற்று.
- 1998-பன்னாட்டு விண்வெளி நிலையத்தின் முதலாவது பகுதி சாரியா விண்ணுக்கு அனுப்பப்பட்டது.

### பிறப்புக்கள்

- 1750-திப்பு சுல்தான், மைசூர் பேரரசன் (இ.1799)
- 1901-நாசிம் ஹிக்மட், துருக்கிய கவிஞர் (இ.1963)
- 1942-ஜோ பைடன், அமெரிக்கத் துணைத் தலைவர்

### இறப்புக்கள்

- 1910-லியோ தல்ஸ்தோய், ரஷ்ய எழுத்தாளர் (பி.1828)

### சிறப்புநாள்

யுனிசெவ்ப்- குழந்தைகள் தினம்

### குழந்தைகள் தினம்

குழந்தைகள் நாள் உலகின் பல நாடுகளில் ஆண்டுதோறும் வெவ்வேறு நாட்களில் விடுமுறை நாளாகவும் சிறப்பு நாளாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.




அனைத்துலக குழந்தைகள் தினத்தை 1954 இலிருந்து ஐக்கிய நாடுகள் மற்றும் யுனிசெவ்ப் அமைப்புக்கள் ஆண்டு தோறும் நவம்பர் 20 அன்று கொண்டாடுகின்றன.

உலகெங்கிலும் உள்ள குழந்தைகளுக்கிடையே புரிந்துணர்வையும் பொதுநிலைப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக இந்நாள் ஐ.நா அவையினால் பிரகடனப்படுத்தப்பட்டது. அத்துடன் குழந்தைகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கான பல பொதுநல திட்டங்களை உலகெங்கும் நடாத்துவதற்கும் இந்நாள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

இலங்கையில் குழந்தைகள் தினம் ஒக்டோபர் 1 அன்று கொண்டாடப்படுகிறது.

உலக சிறுவர் தினமும் முதியோர் தினமும் இலங்கையில் ஒரே தினத்தில் கொண்டாடப்படுகின்றன.

# வாழ்வின் அழகிய தருணங்கள்!



ஆன்மீகம் 43

## பணம் தலைக்குமேல் ஏறாமல் பார்த்துக் கொள்ளுங்கள்...!

### பணத்தைத் தலையில் சுமக்காதீர்

உங்களைச் சுற்றியுள்ள உன்னதத்தை உணர நீங்கள் தவறிவிட்டால், உங்கள் மூளை ஒரு நரகத்தை உருவாக்கக் கூடும். ஒவ்வொரு நாளும் அது புதிது புதிதாக நரகங்களை உருவாக்கும்.

சுவாசம் என்பது வெறும் காற்றை உள்வாங்கி வெளிவிடும் அர்த்தமற்ற செயல் அல்ல. ஒவ்வொரு சுவாசத்திலும் இருக்கிற படைப்பின் பரிமாணங்களையும் படைத்தவனையும் புரிந்துகொள்ளத் தவறிவிட்டு, தேவையற்ற விடயங்களுக்கு இடம் கொடுத்து நேரத்தை வீணடிக்கிறீர்கள்.


உங்களால் முடியாத ஒன்றைச் செய்யவில்லை என்றால் ஒரு பிரச்சினையும் இல்லை. உங்களால் முடியக் கூடிய ஒன்றைச் செய்யாது விடுவதுதான் துயரமான ஒன்று.

அதிக செல்வம் துன்பத்தைத் தராது. சட்டைப்பையில் நிறைய பணம் இருப்பது ஒரு விதத்தில் நல்லது. ஆனால், அந்தப் பணம் உங்களுடைய சட்டைப் பையில் தங்காமல் தலைக்கு மேல் ஏறும் போதுதான் துன்பம் வரும். பணம் அப்படி தலைக்கு மேல் ஏறாது பார்த்துக்கொள்ளுங்கள்.

சூழ்நிலையில் சிக்கிக்கொள்ளாதீர்கள்

உங்களின் வாழ்வின் அனுபவமே, நீங்கள் வாழ்க்கையில் ஆழமாக ஈடுபடுவதில் தான் இருக்கிறது. ஈடுபாட்டுடன் நீங்கள் செய்பவை எல்லாம் எப்போதும் ஆனந்தமாக உள்ளதை நீங்கள் கவனித்திருக்கிறீர்களா? ஆழமான ஈடுபாடு இருந்தாலொழிய வாழ்க்கையின் அழகை உங்களால் அறிந்து கொள்ள முடியாது.

யார் வேண்டுமானாலும் கடவுளை நேசிக்கலாம். ஏனெனில் கடவுள் யாரிடமும் எதுவும் கேட்பதில்லை. ஆனால், இந்தக் கணம் உங்கள் அருகில் இருப்பவரை நீங்கள் நேசிப்பதற்கு நீங்கள் உங்கள் வாழ்க்கையையே விலையாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அது தான் சவால்.



இதைச் செய்வதற்கு மிகவும் தைரியம் தேவைப்படுகிறது.

மனிதராகப் பிறந்துவிட்டால் நீங்கள் எப்படிப்பட்ட சுழ்நிலைகளில் வாழ்கிறீர்களோ, அதிலேயே சிக்கிவிடக்கூடாது. உங்களுக்கான சூழ்நிலைகளை நீங்கள் தான் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். சூழ்நிலைகளின் தாக்கத்தில் வாழ்வது விலங்கின் தன்மை, மனிதரின் தன்மை, சூழ்நிலைகளை உருவாக்குவது!

உங்கள் வாழ்க்கையில் அழகான சூழ்நிலைகள் வருகின்றன. கொடுமையான சூழ்நிலைகள் வருகின்றன. உங்களுக்கு ஒரே வாய்ப்புதான். அந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி நீங்கள் மேலும் சிறந்தவராக வலிமையானவராக மாறலாம். அல்லது உடைந்து நொறுங்கிப் போகலாம்!

(தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# காலத்தை வென்று நின்று நிலைக்கும் கருவூலம் இது



சோழர்களின் புலிக்கொடி கம்பீரமாகப் பறந்த தஞ்சையில் உலகத் தமிழர் பேரமைப்பு எழுப்பியுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் மூன்றாண்டுகளாக எண்ணற்ற சிற்பிகள், கட்டிடக் கலைஞர்கள் மற்றும் தொழிலாளர்களின் கடும் உழைப்பின் பேரில் எழுப்பப்பட்டது.

தமிழ்நாட்டு மக்களும், உலகத் தமிழர்களும் அள்ளித் தந்த நிதியின் உதவியில் இது கட்டிமுடிக்கப்பட்டது.

தமிழ்நாடு, தமிழீழம், மலேசியா, தென்னாப்பிரிக்கா போன்ற தமிழர் வாழும் நாடுகளில் மொழி, இனம், மண் காக்க உயிர்த்தியாகம் செய்தவர்களின் உன்னதமான நினைவகமாக இது திகழ்கிறது.

ஆங்கிலேய ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காக இந்திய துணைக் கண்டத்தைச் சேர்ந்த அனைத்து தேசிய இன மக்களும் போராடியபோது, பஞ்ச நதிகள் பாய்ந்தோடும் பஞ்சாபில் ஜாலியன் வாலாபாக்கில் ஆங்கிலேய இராணுவத்தினால் சுட்டுக்கொல்லப்பட்டவர்களின் குருதி தோய்ந்த மண்ணில் அவர்களுக்கான நினைவகம் இன்றும் நின்று நிலவுகிறது.

தமிழ்நாட்டில் முத்தமிழ் வளர்த்த மூதூர் மதுரையில் அமைக்கப்பட்டுள்ள காந்தியடிகளின் நினைவகத்தில் காந்தியப் போராட்டங்களில் ஈடுபட்டு உயிரிழந்தவர்களின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்களில் உயிரிழந்த தளபதிகளுக்கும் படை வீரர்களுக்கும் சென்னையில் நினைவகம் கட்டப்பட்டுள்ளது.

அந்நிய நாட்டைச் சேர்ந்த வீரர்களுக்கு. நமது மண்ணில் நினைவுச் சின்னம் எதறகு என யாரும் கேட்டதில்லை. ஆனால, தமிழீழ விடுதலைப் போரில் உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கு இங்கே ஏதற்கு நினைவுச் சின்னம் என அதிகார வர்க்கம் கேட்கிறது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நினைவகங்களைப் போல முள்ளிவாய்க்கால் நினைவு முற்றமும் அமைக்கப்பட்டுள்ளது.

தியாகவடிவமாக எழுந்து நிற்கும் பெருமைக்குரிய இந்தப் புனிதமான நினைவு இல்லத்தை திறக்கவிடாது தடுக்க இந்திய அரசும் தமிழக அரசும் முயற்சிகளை மேற்கொண்டன.

தனிநபர்கள் சிலரைக் கொண்டு மதுரை உயர்நீதிமன்றத்தில் நினைவு இல்லத்தை அடியோடு தகர்க்க வேண்டும் என மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அதன் பின்னணியில் தமிழக காவற்றுறை நின்றது.

வேறுபலரும் திறப்பு நிகழ்ச்சியை நடைபெறவிடாது தடுக்க திரைமறைவு வேலைகளில் ஈடுபட்டனர். நவம்பர் 3ஆம் தேதி அன்று தில்லியில் இருந்து இந்திய அரசின் உயர் அதிகாரிகள் தமிழக அரசுக்கு கொடுத்த நிர்பந்தத்தை எதிர்த்து நிற்க திராணியில்லாது அது பணிந்தது.

நவம்பர் 4ஆம் தேதியன்று தஞ்சையைச் சேர்ந்த காவற்றுறை அதிகாரி ஒருவர் பந்தலுக்குச் சென்று அதைப் பிரிக்க வேண்டும் என மிரட்டினார். எழுத்துப்பூர்வமான உத்தரவில்லாது பந்தலைப் பிரிக்க முடியாது என நமது தோழர்கள் மறுத்தனர்.

நவம்பர் 5ஆம் தேதியன்று நிகழ்ச்சியை நடத்த உயர்நீதி மன்றத்தின் அனுமதியைப் பெற்றோம். இந்த வழக்கில் நமக்காக மூத்த வழக்கறிஞர் விஜயன் வாதாடி வெற்றி பெற்றுத் தந்தார்.

ஆனால், அந்த தீர்ப்புக்கு தடை வாங்கும் வெறியுடன் காவற்றுறை உயர் அதிகாரிகள் மதுரைக்குச் சென்றிருக்கிறார்கள் என்பதை அறிந்தவுடன், உடனடியாக முடிவெடுத்து செயற்படவேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டது.

எனவே, பத்திரிகையாளர்கள், உள்ளூரிலிருந்த தோழமைக் கட்சித் தலைவர்கள் ஆகியோர் முன்னிலையில் அழைபபிதழில் குறிப்பிடப்பட்ட நவம்பர் 8ஆம் தேதிக்கு இரண்டு நாட்கள் முன்னதாகவே நவம்பர் 6 அன்று நண்பர் ம. நடராசன் தலைமையில் உணர்ச்சிப் பாவலர் காசி ஆனந்தன் உலகத் தமிழர் கொடியை ஏற்றிவைத்தார். முற்றத்தை நான் திறந்து வைத்தேன். நிகழ்ச்சி இனிது நடந்தேறியது.

இந்தச் செய்தியறிந்தவுடன் காவற்றுறை அதிகாரிகள் மிகவும் அதிர்ச்சியடைந்தார்கள். கிடுகிடுத்துப் போனார்கள்.

இதைத் தொடர்ந்து நவம்பர் 8,9,10 ஆகிய நாட்களில் நிகழ்ச்சிகள் திட்டமிட்டபடி நடந்தேறின. அழைக்கப்பட்ட தலைவர்களும் தமிழறிஞர்களும் கவிஞர்களும் திரைப்படக் கலைஞர்களும் கலந்துகொண்டு உரையாற்றிச் சிறப்பித்தனர்.

முதல் இரண்டு நாட்கள் நிகழ்ச்சிகளும் முடிந்த பின்னர் 10ஆம் தேதியன்று அதிகாலையில் 3 மணிக்கு காவற்றுறையினர் பந்தலுக்குள் நுழைந்து அங்கு உறங்கிக்கொண்டிருந்த ஒலிபெருக்கி உரிமையாளரையும் அவருடைய துணை ஆளையும் கைது செய்தனர்.

பந்தலில் கட்டப்பட்டிருந்த ஒலி பெருக்கிகளை சட்டவிரோதமான முறையில் பறிமுதல் செய்து அகற்றினர். இதற்கு அவரகள் சொன்ன ஒரே காரணம் முதல் நாளில் இரவு 10 மணிக்கு மேல் கூட்டத்தில் பேசியதுதான்.

-பழ நெடுமாறன்- (தொடரும்)

## தே.அ.அட்டைக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டு நடைபெறவுள்ள க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் யாழ்.மாவட்டத்திலிருந்து தோற்றும் மாணவர்களில் 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பிறந்த மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகள் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலை மூலம் தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்திருந்த பெரும்பாலான மாணவர்களுக்கே இவ்வாறு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் தேசிய அடையாள அட்டைக்காக விண்ணப்பித்த மாணவர்களில் இதுவரையில் தேசிய அடையாள அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் பாடசாலை அதிபர்கள் , கல்வி அலுவலகம் ஊடாக ஆட்பதிவுத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாடசாலைகள் மூலம் மாணவர்கள் தேசிய அடையாள அட்டைகளை இலகுவாக பெற்றுக்கொள்ள உதவிபுரிந்த ஆட்பதிபு திணைக்கள ஆணையாளர் மற்றும் அதிகாரிகளுக்கு யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் அத்துறை சார்ந்தோரால் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)

# மாற்று எதிர்க்கட்சியை உருவாக்க அரசியல் களத்தில் குதிப்போம்

### பொதுபல சேனா தெரிவிப்பு


(கொழும்பு)

**ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக மாற்று எதிர்க் கட்சியை உருவாக்க அரசியலில் இறங்க போவதாக பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.**

நாட்டின் முக்கியமான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, சமகி அமைப்பு போன்ற நாட்டுக்கு எதிரான அமைப்புகளுடன் இணைந்து சீர்கெட்டு போகுமாயின் நாட்டுக்கு தேவையான முக்கியமான எதிர்க் கட்சியை உருவாக்க பொது பல சேனா அமைப்பு உதவும் என அந்த அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவிததார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் கைப்பாவையாக நாம் செயற்படுவதாக எதிர்க்



கட்சியும் எதிர்க்கட்சிகளின் விருப்பு வெறுப்புகளை நாம் கைக கொண்டுவருவதாக அரசாங்கமும் எம்மீது குற்றம் சுமத்துகின்றது-

தொடர்ந்தும் எமக்கெதிராக இத்தகைய பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டும் வருகின்றன. எனினும் நாம் பௌததர்கள், எதிர் நோக்கும் சவால்களுக்கு எதிராக செயற்பட்டு வருகின் றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் பொதுபல சேனா அமைப்பை பயங்கரவாதிகளாக சித்திரித்து புகைப்பட கண்காட்சி நடத்தப்படுவதாக கேள்விப்பட்டோம்.

அதுபற்றி அறிந்து கொள்வதற்கு எங்களுக்கு உரிமையுள்ளது. இதன் காரணமாகவே நாங்கள் அங்கு சென்றோம்.

நாங்கள் உள்ளே சென்றதும் அவற்றை பார்வையிட அங்கிருந்தவர்கள் அனுமதிக்க மறுத்தனர். அன்று விடுதலைப்புலிகள் மனித உரிமைகளை மீறிய போது எதுவும் பேசாதிருந்தவர்கள் இன்று பிரிவினைவாதத்தை தூண்டி வருகின்றனர்.

இறுதியில் எங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. எமது பிக்குமார் சிலர் சிறு காயங்களுக்கும் உள்ளாகி வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

சிறிகொத்தா என்பது முக்கியமான அரசியல் தலைவர்களை உருவாக்கிய இடமாகும்.

அத்தகைய அப்படியான இடத்தை ஏன் அடிப்படைவாதத்தை தூண்டுபவர்களுக்கு வழங்கினார்கள் என்பது தெரியவில்லை.

பிரிவினைவாதத்தையும் அடிப்படைவாதத்தையும் தூண்டுபவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி உதவி வருகிறதா என அந்த கட்சி யின் பிக்குகள் முன்னணியிடம் கேள்வி எழுப்புகிறேன் என்றார். (அ-2)







**சிலிவ் பேர்ட் நிறுவனத்தின் அனுசரணையில் கொழும்பு கப்பிற்றல் சிற்றி றோட்டறிக் கழகமும் நல்லூர் றோட்டறிக் கழகமும் இணைந்து தீவுப்பகுதியில் உள்ள 12 பாடசாலைகளின் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கின. இந்நிகழ்வில் கப்பிற்றல் சிற்றி றோட்டறிக் கழகத்தின் உறுப்பினர் மங்கள விளக்கேற்றுவதையும் மாணவர்கள் மற்றும் அதிபரிடம் உபகரணங்கள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.**

## விநாடிவினா போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவபப் புலவர் சங்கம் ஆறுமுக நாவலர் குருபூசையை முன்னிட்டு நாவலர் சம்பந்தமான விடயப்பரப்பில் விநாடி வினா போட்டி ஒன்றை நடத்தி பரிசில் வழங்கவுள்ளது.

இப் போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் பெயர், முகவரி, பாடசாலை, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு **தலைவர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம், 153, காங்கேசன்துறை வீதி, கொக்குவில்** என்னும் முகவரிக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

போட்டிகள் யாவும் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

மேலதிக விபரங்களை 0776 132176 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (அ)

# ஆசிரியர் சேவை 3-II இற்குள் எம்மையும் உள்வாங்குங்கள்

### உதவியாசிரியர்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

வன்னியில் கடமையாற்றும் ஆசிரிய உதவியாளர்களின் மாதாந்த சம்பளம் 10 ஆயிரம் ரூபாவிலிருந்து 6 ஆயிரம் ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளமைக்கு விசனம் தெரிவித்தும் ஆசிரிய சேவை 3-II இற்குள் உள்வாங்குமாறு கோரியும் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவுக்கு வன்னி உதவி ஆசிரியர் ஒன்றியம் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த ஜூன் மாதம் வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படுவதாக பல தடவைகள் கூறிக்கொண்டு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டது.

எமக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்ட மாதத்தில் இருந்து கடந்த மூன்று மாதங்களாக பத்தாயிரம் ரூபா சம்பளமாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது இத் தொகை குறைக்கப்பட்டு மிக மிக குறைந்த சம்பளமாக ஆறாயிரம் ரூபா மட்டுமே வழங்கப்படுகின்றது.

எம்மில் பலருக்கு மிகவும் தொலை தூரத்தில் உள்ள பாடசாலைகளுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அப்பாடசாலைகளுக்கு போய்வரும் போக்குவரத்துச் செலவுகளுக்கே பத்தாயிரம் ரூபா சம்பளம் போதாமலிருந்தது. அனைத்து ஆசிரிய உதவியாளர்களும் குடும்ப பொறுப்புடையவர்களாகவும் குடும்ப செலவுகளையும் கவனிக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர்.

ஆசிரிய உதவியாளர்களது குடும்பங்கள் தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு காரணமாக மிகவும் வசதி குறைந்த அவல வாழ்க்கையில் அல்லற்படுகின்றனர்.

இந்நிலையில் மேலும் ஆறாயிரம் சம்பளமாக குறைக்கப்பட்டுள்ளமையால் பலர் சொல்ல முடியாத அளவுக்கு பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

ஆசிரியர் உதவியாளர்களது குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட சமுர்த்தி உதவி உட்பட அனைத்து உதவித் திட்டங்களும் அரச ஊழியர்கள் என காரணம் காட்டி நிறுத்தப்பட்டுள்ளன.

எனவே ஆசிரியர் உதவியாளர்களாகிய எம் நிலைமையினை புரிந்து கொண்டு எமக்கான சம்பளத்தை அதிகரித்து வழங்குவதற்கும் எம்மை ஆசிரியர் சேவை 3-II இற்குள் உள்வாங்கி எம்மையும் ஆசிரியர்களாக ஏற்று மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் நாமும் முழு மனதோடு ஈடுபட உதவுமாறு தங்களை மிகவும் தாழ்மையுடனும் மிகுந்த எதிர்பார்ப்புக்களுடனும் கேட்டுக்கொள்கின்றோம் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் , வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.(அ)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



மீசாலை வடக்கைச் சேர்ந்த காசிநாதன் ஈஸ்வரலிங்கம் அண்மையில் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால் சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் நீதிபதி செ.லெனின்குமார் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் பட்டதாரி பயிலுநராக கடமையாற்றி வருகின்றார். இவர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்ப்பாண பல்கலைக் கழக வர்த்தக பட்டதாரியும் ஆவார்.

* * *



மானிப்பாயைச் சேர்ந்த திருமதி கிருபாமேரி வசீகரன் அண்மையில் யாழ். மாவட்ட மேலதிக நீதவான் எஸ். சிவகுமார் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியில் தற்போது ஆசிரியராகப் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத் தக்கது. (அ)

# போர்க்குற்ற விசாரணை குறித்து சிலர் பகல் கனவு

## ஜனாதிபதி தெரிவிப்பு

**போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் சிலர் பகல் கனவு காண்கின்றனர் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பு தெமட்டகொட சேன்புர தொடர்மாடி வீடுகளைத் திறந்து வைக்கும் வைபவத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி இலங்கை குறித்து சர்வதேசத்தில் மேலும் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் இந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் பகல் கனவு கண்டு வருகின்றனர்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்கு வந்த பல தலைவர்கள், நாட்டின் அபிருத்தியையும், முன்னேற்றத்தையும் கண்டு மகிழ்ச்சி தெரிவித்து விட்டு திரும்பிச் சென்றுள்ளனர் என்றார்.

இதேவேளை, பொதுநலவாய மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வருகை தந்த பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.



இதன்போது நலன்புரி நிலையத்தில் வருடக் கணக்காக வாழ்ந்து வரும் வலி. வடக்கு மக்களையும் சந்தித்திருந்தார். பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து இலங்கையில் தீர்க்கப்பட வேணடிய பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் இங்கு இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின் போது மேற்கொள்ளப்பட்ட போக்குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என இலங்கை அரசை வலியுறுத்தியதுடன் நான்கு மாதஙகள் காலக்கெடுவையும் விதித்துள்ளார்.

அத்துடன் இவ் விசாரணையிலிருந்து தவறும் பட்சத்தில் போர்க்குற்ற விசாரணையை ஐக்கிய நாடுகள் சபையிடம் பிரிட்டன் வலியுறுத்தும் எனவும் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பிரிட்டன் பிரதமரின் கருத்துக்கு இராஜதந்திர ரீதியில் நடவடிக்கை

## வலியுறுத்துகிறார் அமைச்சர் வாசு

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன், இலங்கைக்கு எதிராக வெளியிட்ட கருத்து தொடர்பில் இராஜதந்திர ரீதியில் எதிர்ப்பை வெளியிட வேண்டும் என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுநலவாய நாடுகளின் செயலாளர் மற்றும் பிரித்தானிய வெளிவிவகார செயலாளர் ஆகியோரிடம் இது குறித்து உரிய முறையில் முறைப்பாடுகளை செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்வது மிகவும் முக்கியமானதும் அத்தியாவசியமானதுமாகும். அங்கத்துவ நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினைகள் தொடர்பாக பகிரங்கமாக விமர்சனம் செய்யக் கூடாது என்ற உடன்பாடு பொதுநலவாய அமைப்பிலுள்ளது.

டேவிட் கமரூன் இலங்கையில் வைத்து வெளியிட்ட கருத்துக்களை நான் கடுமையாக எதிர்க்கின்றேன். இது குறித்து அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் தனது எதிர்ப்பைக்காட்டாதுவிடின் அது தவறான முன்னுதாரணம் கொடுத்ததாக அமைந்து விடும்.

பிரித்தானிய பிரதமரின் கருத்துக்களை அற்பமாக எண்ணிவிடக் கூடாது. அது தொடர்பாக இராஜந்திர ரீதியில் நடவடிக்கை எடுப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றார். (அ-2)

# விமானப்படை வீரர் தற்கொலை

(கொழும்பு)

பீதுருதாலகால விமானப் படை முகாமில் பணியாற்றி வந்த விமானப் படை வீரர் ஒருவர் மற்றொரு வீரர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு அவரும் தற்கொலை செய்துகொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் அதிகாலை நடந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நீதவான் விசாரணைகள் நடைபெறவுள்ளன. தனிப்பட்ட பகை காரணமாக குறித்த சம்பவம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கமரூனின் முன்னெடுப்புகள் மகிழ்ச்சி அளிக்கின்றன

## மத்திய அமைச்சர் வாசன்

(கொழும்பு)

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனின் இலங்கை தொடர்பான முன்னெடுப்புகள் மகிழ்ச்சியளிக்கிறது என இந்திய மத்திய கப்பல்துறை அமைச்சர் ஜீ.கே.வாசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கமரூன் இலங்கையில் தங்கியிருந்த இரண்டு நாட்களில் சாதகமான நடவடிக்கைகளை மேற்கொண்டதை எவராலும் மறுக்க முடியாது.

எனினும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் இலங்கை தமிழர் பிரச்சினை விடயத்தில் கொழும்பு பொதுநலவாய மாநாட்டின் போது காத்திரமான பங்கை வகித்திருக்கலாம்.

இலங்கையின் மனித உரிமைகளுக்கு எதிராக இந்திய நாடாளுமன்றத்தில் யோசனை தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என டெசோ மாநாடு வலியுறுத்தி வருவதை அமைச்சர் வாசன் நிராகரித்துள்ளார். (அ-2)

# பொதுநலவாயத்தின் உதவியுடன் விரைவில் உள்ளக விசாரணை

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமைகள் மீறல் தொடர்பில் உள்ளக விசாரணைகளை பொதுநலவாய செயலகத்தின் உதவியுடன் முன்னெடுக்கப் போவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த விசாரணைகளை தேசிய மட்டத்தில் நடத்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், பொதுநலவாய செயலகத்தின் மனித உரிமை பிரிவின் பிரதிநிதிகள் அடங்கிய தூதுக்குழுவினர் எதிர்வரும் டிசெம்பர மாதம் 2ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்ய விருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலேயே முதலில் உள்ளக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் பிரதீபா மஹாநாம தெரிவித்துள்ளார்.

தேசிய ரீதியிலான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதையே பொதுநலவாயம் நம்புகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா மற்றும் நியுசிலாந்து ஆகிய நாடுகளும் தேசிய ரீதியிலான விசாரணைகளை விரும்புகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுநலவாய மாநாட்டுக்கு பின்னர் மனித உரிமை மீறல் குறித்து இலங்கை தன்னைத்தானே விசாரிக்க வேண்டும் என பல நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

பிரிட்டன் காலக்கெடு விதித்துள்ள நிலையில் சீனாவும் இவ்விசாரணையை வலியுறுத்தி இலங்கைக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (அ-2)

# இலங்கைக்கு எதிராக போர்க்குற்றம் சுமத்தும் முயற்சிகள் ஆரம்பம்-திவயின

(கொழும்பு)

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள மனித உரிமைப் பேரவை மாநாட்டில் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்தும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தும் நோக்கில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதோடு இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தும் வகையில் பிரிட்டன் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

பிரித்தானியாவின் இந்த முயறசிக்கு அமெரிக்காவும் கனடாவும் ஆதரவளிக்கவுள்ளன. சர்வதேச போர் நீதிமன்றம் குறித்த பிரகடனத்தில் இலங்கை கைச்சாத்திடவில்லை.

எனினும், மனித உரிமைப் பேரவையில் விசேட தீர்மானம் நிறைவேற்றி அதன் மூலம் இலங்கைக்கு எதிராக சர்வதேச போர் நீதிமன்றில் வழக்குத் தொடர முயற்சிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு எதிராக சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப் படும் என பிரிட்டன் பிரதமர் கமரூன், புலம்பெயர் தமிழர்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளதாக அவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)




யாழ்ப்பாண கல்வி வலய விசேட கல்விப் பிரிவு நடத்திய விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டு விழா நேற்று யா/கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்கள் போட்டியில் கலந்து கொள்வதையும் வெற்றி பெற்ற மாணவர்களுடன் விருந்தினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- என்.குமார்)

# மாற்று அரசியல் கேந்திரமாக மாறியுள்ள யாழ்ப்பாணம்!

கொமன்வெல்த் மாநாடு, வடக்கின் மீதான உலகத்தின் கவனத்தை மீண்டும் ஒருமுறை திருப்பிவிட்டுள்ளது. கொமன்வெல்த் மாநாட்டுக்கு வருகை தந்த சில வெளிநாட்டுத் தலைவர்களும் பிரதிநிதிகளும், வடக்கிற்கு பயணம் மேற்கொண்டது முக்கியமானதொரு திருப்பம்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும், வடக்கு மாகாண முதல்வர் விக்னேஸ்வரனின் அழைப்பை ஏற்றும், தமிழ்நாட்டின் அரசியல் நிர்ப்பந்தங்களிலிருந்து தப்பிக்கவும், யாழ்ப்பாணம் செல்லும் ஒரு திட்டத்தைக் கொண்டிருந்தார்.

ஆனால், கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்பதில்லை என்று அவர் எடுத்த முடிவினால், இந்தியப் பிரதமரின் யாழ்ப்பாணப் பயணம் கிட்டத்தட்ட சாத்தியமற்றதாகியுள்ளது.

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், யாழ்ப்பாணத்துக்குச் சென்று, வடக்கு மாகாண முதலவரைச் சந்தித்திருந்தால், அது ஒரு அரசியல் திருப்பமாகவே அமைந் திருக்கும்.

ஏற்கனவே, இலங்கையின் மாற்று அரசியல் கேந்திர மையமாக மாறத் தொடங்கியுள்ள யாழப்பாணத்துக்கு, இது மேலும் பெறுமதியைக் கூட்டியிருக்கும்.


இலங்கையில் கொழும்புக்கு மாற்றான, அரசியல் கேந்திர மையமாக, ஒரு காலத்தில் யாழ்ப்பாணமும், பின்னர், கிளிநொச்சியும் விளங்கின.

விடுதலைப் புலிகளின் பலம் தான், அத்தகைய நிலையை இந்த நகரங்களுக்கு பெற்றுக் கொடுத்திருந்தது. அதுபோலவே, இப்போது மீண்டும் யாழ்ப்பாணம், இலங்கையின் மாற்று அரசியல் கேந்திர மையமாக மாற்றம் பெறத் தொடங்கியுள்ளது.

இதற்குக் காரணம், வடக்கு மாகாணசபைத் தேர்தல்தான்.

வடக்கு மாகாண சபைக்கு நடத்தப்பட்ட தேர்தலில், அரசாங்கத்தரப்பு வெற்றி பெற்றிருந்தால், இத்தகைய நிலை ஒருபோதும், யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்திருக்க மாட்டாது.

ஏனென்றால், கொழும்பின் குரலாகவே யாழ்ப்பாணமும் எதிரொலிக்கும் என்பதால், அதனை அத்தகையதொரு மாற்று அரசியல் கேந்திரமாக எந்தவொரு வெளிச் சக்தியும் ஏற்றுக்கொண்டிருக்காது.



ஆனால், வடக்கு மாகாண சபைத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றி, யாழ்ப் பாணத்துக்கான அந்தக் கதவை மீளவும் திறந்துவிடக் காரணமாகி யுள்ளது.

அதுவும், ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்துடன் வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியைப் பிடித்ததும், தமிழ் மக்களின் எதிர்பார்ப்பும், இலங்கை அரசின் போக்கும் ஒரே கோட்டில் பயணிக்கவில்லை என்பது சர்வதேச சமூகத்துக்கு, வெளிச்சமாகிவிட்டது.

இந்தநிலையில்தான், வடக்கின் மீதான, குறிப்பாக வடக்கு மாகாணத்தின் புதிய அரசுடனான உறவுகளில், வெளிநாடுகள் கவனம் செலுத்தத் தொடங்கி யுள்ளன.

வடக்கு மாகாண முதல்வராக க.வி.விக்னேஸ்வரன் பதவியேற்ற பின்னர், முதலாவதாக அவரைச் சென்று சந்தித்திருந்தார் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித். அதற்குப் பின்னர், கிட்டத்தட்ட கடந்த ஒரு மாத காலத்தில், அமெரிக்க தூதுவர் மிச்சேல் ஜே சிசன், தென் கொரியத் தூதுவர், ஐரோப் பிய ஒன்றியப் பிரதிநிதி, என்று வெளிநாட்டு இராஜதந்திரிகள் அடுத்தடுத்து வடக்கு மாகாண முதல்வரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

கொமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்க வந்த கனேடிய வெளிவிவகார மற்றும் மனித உரிமைகளுக்கான நாடாளுமன்ற செயலர் தீபக் ஒப்ராய், பிரித்தானிய பிரதமர் டேவிட் கமருன், நியுசிலாந்து வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்டோரும், வடக்கு மாகாணத்துக்குச் சென்று முதல்வர் விக்னேஸ்வரனை சந்தித்துள்ளனர்.

இன்னும் பலர் யாழ்ப்பாணத்திற்கு வரும் வாய்ப்புகளும் உள்ளன.

இப்படியொரு முக்கியத்துவம் யாழ்ப்பாணத்துக்கு வரும் என்று அரசாங்கம் கருதியிருக்காது.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் இந்த நிலையை ஏற்படுத்தியிருந்தாலும், சர்வதேச தலைவர்களின் கவனிப்புக்குரிய - அக்கறைக்குரிய மையமாக யாழ்ப்பாணத்தை திரும்பிப் பார்க்கச் செய்துள்ளது கொமன்வெல்த் மாநாடுதான்.

கொமன்வெல்த் மாநாட்டுக்குப் பின்னர், வடக்கின் மீதான சர்வதேச கவனிப்பும், வடக்குடனான சர்வதேசத்தின் தொடர்பாடலும் இன்னும் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன.

தமிழர் தரப்பின் இந்த பிரச்சினைகள், மேலும் சர்வதேச மயப்படுவதற்கான இன்னொரு பரிணாமத்தை அளிக்கும்.

இது, "ஒரே இலங்கை, ஒரே அரசு, ஒரே கொள்கை" என்ற - எல்லாமே "ஒரே குடையின் கீழ், ஒரே குடும்பத்தின் கீழ்" இருக்க வேண்டும் என்ற மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு சவாலாகியுள்ள ஒரு விவகாரமாகும்.

2009இல் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டதுடன், தமிழர்களின் தனியான அரசியல் களத்தையும் மூடிவிட்டதாகவே அரசாங்கம் கருதியிருந்தது.

ஆனால், கொழும்புக்கு மாற்றான, தமிழரின் அரசியல் கேந்திர நிலை ஒன்று மீளப் பிறப்பெடுப்பதை, அரசாங்கத்தினால் தடுக்கவோ தவிர்க்கவோ முடியவில்லை.

வடக்கு மாகாணசபை தெரிவு செய்யப்பட்டதும், வடக்கை நோக்கி படையெடுக்கும் வெளிநாட்டுத் தூதுவர்கள், இராஜதந்திரிகளையும், தலைவர்களையும் அரசாங்கத்தினால், தடுக்க முடியவில்லை.

போருக்குப் பின்னர், வடக்கை அபிவிருத்தி செய்து சாதனை செய்துவிட்டோம் என்று பிரகடனப்படுத்திய அரசாங்கமே, இவையனைத்தையும் வந்து பார்க்கும்படி வெளி நாடுகளுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இத்தகைய நிலையில், வடக்கின் மீதான வெளிநாடுகளின் கரிசனையையும், வடக்கு மாகாணசபையுடனான வெளிநாடுகளின் அதிகாரபூர்வமான தொடர்புகளையும் அறுத்தெறிய முடியாத நிலை ஒன்று உருவாகியுள்ளது.

அதுவும், இதற்கு முன்னர் ஒரு எதிர்க்கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிநாடுகளுக்கு கூறும் கருத்துகளுக்கும், வடக்கு மாகாணத்தில் அதிகாரத்திலுள்ள அரசு ஒன்று கூறும் அதிகாரபூர்வமான கருத்துக்கும் இடையில் வேறுபாடுகள் இருக்கும்.

தமிழ்மக்களின் பிரச்சினைகளை ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசின் மூலம் வெளிப்படுத்தப்படும் வாய்ப்பு முதல் முறையாக தமிழர்களுக்கு கிடைத்துள்ளது. அதைப் பயன்படுத்திக் கொள்ள பல்வேறு நாடுகளும் முனைகின்றன. அதே வேளை, இந்த வாய்ப்பைத் தமிழர் தரப்பும் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டியதும் முக்கியமானது.

இதனை இரண்டு விதமாக மேற்கொள்ளலாம்.

முதலாவது, வெளிநாட்டுத் தொடர்புகள் மூலம் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கான வாய் ப்புகளை உருவாக்கிக் கொள்வது.

இரண்டாவது, தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெறுவதற்கான தளமாக பயன்படுத்திக் கொள்வது.

வெளிநாட்டு தொடர்புகள் மூலம வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதில் வரையறுக்கப்பட்டளவுக்கே மாகாணசபையால் பங்காற்ற முடியும். ஏனென்றால், மாகாணசபைக்கு நிதி அதிகாரம் கிடையாது.

மாகாணசபைக்குத் தேவையான நிதியை திரட்டும் அதிகாரமில்லாததால், மத்திய அரசின் கையை ஏந்த வேண்டியநிலை.

வெளிநாடுகளிடம் இருந்து நிதி உதவிகளைப் பெறுவதானாலும், மத்திய அரசின் ஊடாகவே அதைப் பெற வேண்டியுள்ளது. இத்தகைய நிலையில், வடக்கை அபிவிருத்தி செய்வதற்கும், வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கும் வடக்கு மாகாணசபை பெரும் போராட்டம் நடத்த வேண்டிய நிலையே ஏற்படும்.

ஆனால், வெளிநாடுகளுடனான தொடர்புகள் மூலம் தமிழர் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்துவதறகு இது முக்கிய தளமாக விளங்க முடியும். குறிப்பாக, தமிழர் தரப்பின் தற்போதைய அரசியல் இராஜ தந்திரப் போருக்கான அடிஊற்றாக வடக்கு மாகாணசபை மாறத் தொடங்கியுள்ளது.

வடக்கிற்கான நிதியை கட்டுப்படுத்துவது போன்று இதனை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்த முடியாது. அரசாங்கத்தினால் இதனை ஜீரணித்துக் கொள்ள முடியாத போதிலும், வடக்கு மாகாணசபைக்கும், வெளியுலகிற்குமான நெருக்கம் அதிகரிப்பதை அரசாங்கத்தினால் வேடிக்கை பார்ப்பதை விட வேறேதும் செய்ய முடியாது.

போருக்குப் பின்னரான நான்கு ஆண்டுகளையும் அரசாங்கம், அரசியல்தீர்வு, அதிகாரப்பகிர்வு, பொறுப்புக்கூறல், புனர்வாழ்வு, புனரமைப்பு, ஜனநாயகம், பாதுகாப்பு, சுதந்திரம் என்று வடக்கிலுள்ள மக்களின் எல்லாப் பிரச்சினைகளையும் சாதகமான முறையில் தீர்க்கும் முயற்சியில் கணிசமான முன்னேற்றத்தை எட்டியருந்தால், கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும், இருவேறு அதிகார மையங்கள் உருவாகியிருக்க முடியாது.


ஒற்றையாட்சி என்று அரசாங்கம் கூவிக் கூவி, நடத்திய இனவாத அரசியல் வியாபாரம்தான், மீண்டும் யாழ்ப்பாணத்தை இலங்கையின் இரண்டாவது அரசியல் கேந்திர மையமாக உருவாக்கியுள்ளது.

இந்த இரண்டாவது அரசியல் கேந்திர மையத்தின் மீள் எழுச்சியின் விளைவு, இலங்கை அரசுக்கு சாதகமானதொன்றாக இருப்பதற்கு வாய்ப்பில்லை.

-ஹரிகரன்-

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

# 17.11.2013–15.12.2013



## கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

# பெருமைக்குரிய செயல்களை முடித்துக் காட்டுவீர்கள்

**கிடைக்கும் வாய்ப்புக்களை உபயோகப்படுத்திக் கொள்ளும் கும்ப இராசி நேயர்களே!**

**பணத்தேவைகள் அதிகரிக்கும்!**

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சனி உச்சம் பெற்று அஷ்டமாதிபதி புதனுடன் இணைந்து இருப்பதால் நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். தன லாபாதிபதியான குரு வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பணத்தேவைகள் கடைசி நேரத்தில் தான் பூர்த்தியாகும். குடும்பத்தல் ஏற்படும் சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமல் இருப்பது நல்லது.

3 இல் கேது சஞ்சரிப்பதால் உடன்பிறப்புக்கள் வழியே ஒரு விரயம் ஏற்படலாம். உற்சாகமும் தன்னம்பிக்கையும் உங்கள் முன்னேற்றத்திற்கு கைகொடுக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா என்பது சந்தேகம்தான். ஏனென்றால், வாக்கு ஸ்தானாதிபதி வக்ரம்பெற்று இருக்கிறார். எனவே, யாருக்கும் வாக்குக் கொடுக்கும் முன் ஒரு கணம் யோசிப்பது நல்லது. பொதுவாக குரு வழிபாட்டை நீங்கள் முறையாக மேற்கொண்டால் குடும்பப் பிரச்சினைகளும் தீரும். கொடுக்கல், வாங்கல்களும் ஒழுங்காகும்.

சப்தம ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். எனவே, வாழக்கைத்துணை வழியே வரவு வந்து சேரும். அவர்களின் வேலை வாய்ப்பிற்கு ஏதேனும் முயற்சி எடுத்திருந்தால் அது கைகூடும். சூரிய பலம் நன்றாக இருக்கிறது. எனவே, அரசியல்வாதிகளாலும் அனுகூலம் உண்டு. அரசுவழி சலுகைகளும் எதிர்பார்த்தபடி வந்து சேரும். சூரியன், செவ்வாய் ஆகியவை பரிவர்த்தனை ஆகியிருப்பதால் பரிவர்த்தனை யோகத்தின் பயனால் மறைமுக எதிர்ப்புகள் மாறும். அரைகுறையாக நின்ற பணிகள் தொடரும். மருத்துவச் செலவுகள் குறையும். மாதத்தின் மையப் பகுதியில் செவ்வாய் பெயர்ச்சிக்குப் பின்னால் கொஞ்சம் விரயங்கள் கூடலாம். அந்த நேரம் விழப்புணர்ச்சி அதிகம் தேவைப்படும் நேரமாகும்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

நவம்பர் 28 ஆம் திகதி விருச்சிக இராசியில் புதன் சஞ்சரிக்கின்றார். இதன்விளைவாக மைத்துனர் வழி ஒத்துழைப்பு கிடைத்து மகிழ்ச்சி காண்பீர்கள். சேமிப்பு உயரும். செயற்பாடுகளில் வெற்றி கிட்டும். உத்தியோகம் தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் இதுவரை இருந்த தடை அகலும். அஷ்டமாதிபதியாகவும் புதன் விளங்குவதால் புதிய நபர்களை நம்பி எந்த முயற்சிகளையும் எடுக்கக் கூடாது. ஏனென்றால் இந்த நேரத்தில் ஏமாற்றங்களையும் சந்திக்க நேரிடும். விட்டுப்போன வரன்கள் கூட மீண்டும் திரும்பி வரலாம்.

**கன்னிச் செவ்வாய் என்ன செய்யும்?**

நவம்பர் 30 ஆம் திகதி கன்னி இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக உங்கள் வாழ்க்கையில் பலவித மாற்றங்கள் ஏற்படப்போகின்றன. குறிப்பாக இடமாற்றம், வீடு மாற்றம், ஊர் மாற்றம் ஒரு சிலருக்கு ஏற்படலாம். எதிலும் சொந்த முடிவு எடுப்பதைக் காட்டிலும் பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேட்டு எடுக்கும் முடிவே வெற்றி தரும். விரயங்கள் கூடுதலாக இருக்கும் இந்த நேரத்தில் எல்லோரையும் அனுசரித்துச்செல்வது நல்லது. செவ்வாய் துலாம் இராசிக்கு மாறும் வரை பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரமிது.

**மகரச் சுக்ரனின் சஞ்சாரம்!**

மகர இராசியில் சுக்ரன் டிசம்பர் 3 ஆம் திகதி சஞ்சரிக்கின்றார. இதன் விளைவாக ஓரளவு நல்ல பலன்கள் உங்களைத் தேடி வரப்போகின்றது. 4, 9க்கு அதிபதியான சுக்ரன் 12 இல் மறைகிறார். அதேநேரத்தில் அதன்பார்வை 6 ஆம் இடத்தில் பதிகிறது. எனவே, எதிரிகள் பணிந்து வருவர். உழைப்பிற்கேற்ற நல்ல பலன் கிடைக்கும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறவில்லையே என்ற கவலை மாறும். பெண்களின் ஒத்துழைப்போடு பெருமைக்குரிய செயல்களை முடித்துக் காட்டுவீர்கள். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து ஆனைமுகப்பெருமான் வழிபாட்டையும் சனீஸ்வரர் வழிபாட்டையும் பிரதோஷ நந்நாளில் நந்தி வழிபாட்டையும் வள்ளி மணாளப்பெருமான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள்.

# சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

# அந்நிய தேசத்திலிருந்து நல்ல தகவல்கள் வந்துசேரும்

**விருந்தினர்களை உபசரிப்பதில் வல்லவர்களாக விளங்கும் மீன இராசி நேயர்களே!**

**ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை!**

கார்த்திகை மாதக் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது இராசிநாதன் சனி உச்சம் பெற்றிருக்கிறார. எனவே, ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும். குடும்ப சுமை கூடினாலும் தனாதிபதி செவ்வாய் 6 ஆம் இடத்தில் இருந்து 12 ஆம் இடத்தைப் பார்ப்பதால் தேவைப்படும் நேரத்தில் எல்லாம் பணம் உங்களுக்கு வந்து கொண்டேயிருக்கும்.

வாக்கு ஸ்தானத்தில் கேது பலம் பெறுகிறார். எனவே, கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலுமா என்பது சந்தேகம்தான். விரும்பியது கிடைக்காவிட்டால் கிடைத்ததை விரும்பு என்பது ஒரு அழகான பழமொழி. அந்தப் பழமொழியை இந்த மாதத்தில் நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

குரு வக்ரம் என்பதாலும் எதை எதிர் பார்க்கிறீர்களோ அது நடைபெறுவதில் தாம தம் ஏற்படும். அதேநேரத்தில் நீங்கள் எதிர் பார்க்காத காரியங்கள் நடைபெறும். எனவே, நடப்பவை நடக்கட்டும் என்று இருப்பதோடு நடக்கும் செயல்கள் நல்ல செயலாக நடக்க குரு வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். குருவை வழிபட, அதன் பார்வைபடும் இடமெல்லாம் புனிதமடையும் அல்லவா? குருவின் பார்வை 8,10,12 ஆகியஇடங்களில் பதிவதால் மாற்று மருத்துவத்தால் உங்கள் ஆரோக்கியங்களையும் மாற்றியமைப்பீர்கள். வீட்டுப் பொறுப்புக்கள் கூடும்.

அஷ்டமத்துச் சனிக்குப் பரிகாரமாக ஒவ்வொரு சனிக்கிழமையும் சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வழிபடுவது நல்லது. முடிந்தவர்கள் கருநிற காகம் ஏறிக் காசினி தன்னைக் காக்கும் என்ற சனிக கவசத்தை சனி பகவான் சந்நிதியிலய் பாடலாம். மந்தன் வழிபாட்டை மேற்கொள்வதோடு கந்தன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். அந்தந்தக் காலங்களில் தெசாபுத்திக்கு ஏற்ப தெய்வங்களை வழிபட்டால் தித்திக்கும் விதத்தில் வாழ்க்கை அமையும் என்பதை அனுபவத்தில் கண்டு கொள்வீர்கள்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

விருச்சிக இராசியில் நவம்பர் 28 ஆம் நாள் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக சில நல்ல வாய்ப்புக்கள் உங்கள் இல்லம் தேடி வரப்போகிறது. குறிப்பாக கல்யாணக் கனவுகள் நனவாகும். கல்விக்காக எடுத்த முயற்சிகள் கைகூடும். கடல்தாண்டி சென்று படிக்க வேண்டும் என்று விரும்பும் பிள்ளைகளுக்கு இடம் கிடைத்து மகிழ்ச்சி அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். உற்றார், உறவினர்கள் உங்களை விட்டு விலகிச் சென்றுவிட்டார்களே என்ற கவலை மாறும் விதத்தில் ஒரு சிலர் வந்து இணைவர். ஊர்மாற்றச் சிந்தனைகளை செயற்படுத்திக் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் முன்னேற்றம் வருவதற்கான அறிகுறிகள் தோன்றும். மூடுவிழா கண்ட தொழில்களுக்குக் கூட இனி திறப்பு விழா செய்வீர்கள்.

**மகரச் சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசம்பர் 3 ஆம் தேதி மகர இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக நல்ல வாய்ப்புக்கள் வந்து சேரும். குறிப்பாக புத்தித ஸ்தானத்தைச் சுக்ரன் பார்ப்பதால் பிள்ளைகளுக்கான எதிர்காலம் சிறப்படைய எடுக்கும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அவர்களுக்கான ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அவர்களுக்கு வைப்பு நிதிகளை வங்கிகளில் செலுத்தவும் முன்வருவீர்கள். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலத் தகவல்கள் வீடு வந்துசேரும். பழைய வாகனங்களின் பழுதுச் செலவுகள் அதிகரிக்கிறதே என்ற கவலை இனி மாறும் விதத்தில் புதிய ஏற்பாடுகளைச் செய்வீர்கள்.

இம்மாதம் முருகப்பெருமான் வழிபாட்டையும் வைரவர் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். சனி ஆதிக்க காலத்தில் வரும் பிரதோஷ நாளில் நந்தியெம்பெருமானை வழிபடுவது நல்லது.

(முற்றும்)

# நிந்தவூரில் இரண்டாவது நாளாகவும் பொலிஸார்-பொதுமக்களிடையே முறுகல்




(அம்பாறை)

**நிந்தவூர் கடற்கரைப் பகுதியில் பொதுமக்களுக்கும் விசேட அதிரடிப் படையினருக்குமிடையில் முறுகல் நிலையொன்று ஏற்பட்டதையடுத்து அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.**

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நிந்தவூர் பகுதியில் இரவு வேளை களில் தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற 'கொள்ளை சம்பவங்களைக் கட்டுப்படுத்தல் மற்றும் கொள்ளை யர்களை கண்டுபிடித்தல் தொடர்பில் விசேட விழிப்பு குழுவொன்று அமைக் கப்பட்டு ஆராயப் பட்டது.

இதன்படி இரவு 9 மணிக்கு பின்னர் வீடுகளிலிருந்து வெளியே செல்கின்றவர்கள் தங்களது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களை எடுத்துசெல்ல வேண்டும் என்று அந்த குழு தீர்மானித்து அந்த தீர்மானத்தை பள்ளிவாசல்களின் ஊடாக பொது மக்களுக்கு அறிவித்தது.

இந்நிலையில், விசேட அதிரடிப் படையினர் அணியும் ஆடைகளை ஒத்த ஆடைகளை அணிந்து நிந்தவூர் கடற்கரை பகுதிக்கு வந்த நான்கு அல்லது ஐந்து பேர் அடங்கிய குழுவினர் கடற்கரையில் வைத்து ஆடைகளை மாற்றிக்கொண்டு ஊருக்குள் வருவதை கண்ட பொது மக்கள் அவர்களை சுற்றிவளைத்து ஆள் அடையாளத்தை உறுதபடுத்துமாறு கேட்டுள்ளனர்.

ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்த தவறிய அவர்கள், தங்களை சுற்றிவளைத்த மக்களைத் தாக்கி விட்டு தப்பியோடுவதற்கு முயன்றுள்ளனர்.

சம்பவத்தை கேள்வியுற்று அரசியல்வாதிகளும் அவ்விடத்திற்கு விரைந்துள்ளனர்.

இந்நிலையில், அவ்விடத்திற்கு விரைந்த விசேட அதிரடிப்படையினர் பொதுமக்களால் சுற்றிவளைக் கப்பட்ட அந்த குழுவினரை மீட்டுக் கொண்டு செல்வதற்கே முயனறுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


அதற்கு பொதுமக்கள் இடம்கொடுககாமையை அடுத்து.. விசேட அதிரடிப்படையினர் வானததுக்கும் பூமிககுமா்க நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

பூமியில் விழுந்த துப்பாக்கி சன்னங்கள் தெறித்ததில் பொது மக்களில் இரண்டொருவருக்கு சிறுகாயங்களும் ஏற்பட்டன.இதனையடுத்தே பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

தம்மால் சுற்றிவளைக்கப்பட்டவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன் விசேட அதிரடிப்படையினரின நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து வீதிகளில் ரயர்களை போட்டு எரித்து எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் நேற்று முன்தினம் ஈடுபட்டுளளமையால் அங்கு வழமையான நடவடிக்கைகள் பாதிக்கப பட்டன.

இதேவேளை, ரோந்து சேவையில் ஈடுபட்ட சீருடையணிந்த மற்றும் சிவில் உடையில் இருந்த விசேட அதிரடிப்படையினர் மீது இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியதாகவும் சம்பவத்தில் விசேட அதிரடிப்படையினர் இருவர் காயமடைநதுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)





யா/அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலய முத்தமிழ் விழாவும் வித்தியாவனம் சஞ்சிகை வெளியீடும் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் வித்தியாவனம் நூலின் முதற்பிரதியை யாழ்.பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி. அருணகிரிநாதன் வெளியிட்டு வைப்பதையும் படங்களில் காணலாம்.

## நம்பிக்கை ஆண்டின் நிறைவில் யாத்திரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைமாவட்ட ஆயர்தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் ஏற்பாட்டில் நம்பிக்கை ஆண்டின் நிறைவையொட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக் கிழமை காலை 10 மணிக்கு யாழ். மறை மாவட்டத்தில் அமைந்துள்ள அனைத்து ஆலயங்களிலுமிருந்து யாத்திரைப் பயணமொன்று யாழ். மறை மாவட்ட குருக்களின் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இப் பவனி யாழ். பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை ஆலயத்தில் நிறைவுற்று, அதனைத் தொடர்ந்து யாழ். மாவட்ட ஆயர் தலைமையில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

எனவே, யாழ். மறை மாவட்டத்தில் உள்ள அனைத்து கத்தோலிக்க மக்களையும் இப் பவனியில் பங்கேற்குமாறு யாழ். மறை மாவட்ட பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

இப் பவனியில் பங்கேற்கும் மக்களின் நலன் கருதி குடிநீர், உணவு வசதிகள் என்பன ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## இசைப்பிரியாவின் உறவினர்களுக்கு கனடா அடைக்கலம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி அலைவரிசையின் முன்னாள் செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியாவின் உறவினர்களுக்கு கனடா அரசியல் அடைக்கலம் வழங்கியுள்ளது என சிங்கள ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இசைப்பிரியாவின உறவினர்கள் 6 பேருக்கு இவ்வாறு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டுள்ளது,

இசைப்பிரியாவின் தாய் மற்றும் சகோதரிகளுக்கு முன்னதாகவே பிரத்தானியா புகலிடம் வழங்கியதாகவும் இதற்கு முன்னர் இசைப்பிரியாவின. பாட்டி மற்றும் சகோதரி ஒருவருக்கு கனடா அரசியல் புகலிடம் வழங்கிய தாகவும் அவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# பிரமாண்டமான முறையில் பொதுநலவாய மாநாடு

## லலித் வீரதுங்க புகழாரம்



சர்வதேச நாடுகளுக்கு சவாலான வகையில் பொதுநலவாய நாடுகள் உச்சி மாநாடு பிரமாண்டமாக நடத்தப்பட்டு இலங்கைக்கு பெருமை சேர்க்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

முப்படைகளையும் சேர்ந்த 112 குடும்பங்களுக்கு புதிய வீடுகளை வழங்கும் வைபவம் நேற்றுமுன் தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஹோமாகம பிடிபனவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் உரையாற்றுகையில்,

53 சர்வதேச நாட்டுத் தலைவர்களுக்கு மனித உரிமையின் பொருளைத் தெளிவுபடுத்தியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 'எனது நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய உரிமையையும் சூழலையும பெற்றுக்கொடுத்தமையே மனித உரிமை' ஆகும் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த நாட்டை அழித்து நாட்டைப் பளவுபடுத்த கங்கணம் கட்டிக கொண்டு யுத்தம் செய்த பயங்கரவாதிகள் 12ஆயிரம் பேர் ஆயுதங்களுடன் சரணடைந்த போது, அவர்களுக்கு விடுதலையளித்து புனர்வாழ்வளித்ததுடன், சமூகத்தில் இணையச் செய்தது மனித உரிமையாகும். அதனை ஜனாதிபதி மேற்கொண் டார்.

பொதுநலவாய நாடுகளின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்று இரண்டு பில்லியன் மக்களைக் கொண்ட 53 பொதுநலவாய நாடுகளில் அனைத்து நாடுகளுக்கும் சமமான அபிவிருத்தி இடம்பெற வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு மனித உரிமையை உறுதிப்படுத்தியுள்ளார்.

அடுத்து பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை பொறுப்பேற்று நடத்த சில நாடுகள் பின்வாங்கும் நிலையில உலகத் தலைவர்கள் பிரமிக்கும் வகையில் ஜனாதிபதி பிரமாண்டமாக பொது நலவாய நாடுகளின் மாநாட்டை நடத்தியுள்ளார்.

இந்தளவு பிரமாண்டமாக தம்மால் நடத்த முடியுமோ என்ற வியப்பிலேயே சில நாடுகள் அடுத்த மாநாட்டைப் பொறுப்பேற்கவும் தயங்கின எனவும் ஜனாதிபதியின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் உள்ள அருள்மிகு ஸ்ரீ முருகன் கோவில் திருக்குடமுழுக்கு பெருஞ்சாந்தி விழா மஹா கும்பாபிஷேகம் நாளை மறு தினம் வெள்ளிக் கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நாளை வியாழக் கிழமை முற்பகல் 7 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 12 நாட்கள் தினமும் பிற்பகல் 3 மணிக்கு மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளது. (அ-5)

# கருவேப்பமுறிப்புக் குளம் பகுதியில் திட்மிட்ட சிங்களக் குடியேற்றம்

## பொலிஸாரிடம் முறையிட்டும் பயனில்லை

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட கல்யாணபுரம், கருவேப்பமுறிப்புக் குளம் பகுதி களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அரசினால் மேற்கொள்ளப்படுவதாக வடமாகாண சபை பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெயநாதன் தெரிவித்துள்ளார்.**

குறித்த பகுதிகளில் இருந்த தமிழ் மக்களின் இடப்பெயர்வை தொடர்ந்து அப்பகுதிகளில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளதாகவும் இப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த தமிழர்கள் கரடிப்புலவு, பளப்பாத்தி, பெரிய இத்திமடு ஆகிய இடங்களில் பல இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாகவும் இவர் குறிப் பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் குறித்த மக் களை சந்தித்து இவ்விடயம் தொடர் பில் கலந்துரையாடிய வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில்,

குறித்த கல்யாண புரம், கரு வேப்ப முறிப்பு குளம் ஆகிய பகுதிகளில் குடியிருந்த மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் அப்பகுதி பற்றைக் காடாக மாறியது.

இதையடுத்து அப்பிரதேசம் வனப் பகுதிக்கு உரியது என அறிவிக்கப் பட்டு அதற்கான சுலோகங்களும் இடப்பட்டுள்ளன.

எனினும் அப் பகுதிகளில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டு வருகின் றனர்.

இந்நிலையில் தமது நிலங்க ளுக்கு செல்லும் மக்கள் விரட்டப் பட்டு வருவதுடன், இது தொடர்பில் அம் மக்கள் பொலிஸில் முறைப் பாடுகளை மேற்கொள்வதானால் அச் சுறுத்தப்படும் நிலைக்கும் உள் ளாகி வருகின்றனர்.

இம் மக்கள் அங்கு வாழ்ந்ததற் குரிய ஆதாரங்களை தம்வசம் வைத் திருந்த போதிலும் அப்பிர தேசங்க ளில் மீளக்குடியமர்வதற்கு இவர்க ளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு அங்கு சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட் டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள் ளார்.

மேலும் இவ் விடயம் தொடர்பில் வடமாகாண முதலமைச்சரின் கவ னத்திற்கு கொண்டுவரவுள்ளதாக வும் அவர் இதன் போது தெரிவித் துள்ளார்.

இதேவேளை முல்லைத் தீவு ஒதிய மலைப் பகுதிக்கு விஜயம் மேற் கொண்ட இவர், 1984 ஆம் ஆண் டில் மார்கழி மாதம் 2 ஆம் திகதி யன்று இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 27 பொது மக்களின் நினைவாக அத்தினத்தில் இடம் பெறும் பூசை வழிபாடு தொடர்பிலும் கலந்துரை யாடியிருந்தார். (அ-5)

# ப.தெ.வள கூட்டுறவு சங்கங்களில் புதிய நிர்வாக தெரிவு எப்போது?

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, பூநகரி, பளை ஆகிய பிரதேச செய லக பிரிவுகளில் உள்ள பனை தென்னை வள கூட்டுறவு சங்கத் தின் புதிய நிர்வாகத் தெரிவு பல கால மாக இடம்பெறாத நிலையில் சங் கத்தின் அங்கத்தவர்கள் பெரும் சிர மங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சங்கத்தின் தொழிற்பாடுகளை சிறந்தமுறை யில் செயற்படுத்த முடியாதுள்ளது டன், சங்கத்தின் நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் சங்கம் தொடர்பில் அங்கத்தவர்கள் கடும் அதிருப்தி கொண்டுள்ளதோடு, புதிய நிர்வாகத் தெரிவில் கால இழுத்தடிப்பு செய் வது தொடர்பிலும் விசனம் தெரிவித் துள்ளனர்.

கடந்த 2010 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட நிர்வாகத் தெரிவுக் கான வாக்காளர் பட்டியலில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என கூறியும் பின்னர் வடமாகாண சபைத்தேர் தலை காரணங்காட்டியும் புதிய நிர் வாகத் தெரிவுகள் இடை நிறுத்தப் பட்டிருந்ததாகவும் குறிப்பிடும் அங்கத் தவர்கள் இது தொடர்பில் உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுத்து சங்கத்தின் செயற்பாடுகளை விஸ்தரிக்க உதவ வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.(அ-5-254)

## இருளைப் படைத்தல் நூல் வெளியீடு

(பூந்தோட்டம்)

வவுனியா தமிழ் மாமன்றத்தி னால் வெளி யிடப்படும் பா.திலீபன், செ.மதுரன் ஆகியோர் எழுதிய **இருளைப் படைத்தல்** எனும் கவிதை நூலின் வெளியீட்டு நிகழ்வு எதிர் வரும் 23 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கம்பவாரிதி இ.ஜெய ராஜின் சிறப்புச் சொற் பொழிவு இடம் பெறவுள்ளதுடன் தமிழ் மாமன்றத்தினால் நடத்தப்பட்ட **வன்னியின் வாதச்சமர் நிகழ்வில்** வெற்றி யீட்டியவர்களுக்கான பரி சில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற வுள்ளது. (செ-5-266)





# எரிபொருள் அகழ்வு படுகைகளுக்கு விலை குறிப்பீடுகள் முன்வைப்பு

*(மன்னார்)*

***மன்னார் கடற்படுகையில் அமைந்துள்ள 13 எரிபொருள் படுகைகளுக்கான அகழ்வு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்க இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக் கைக்கு அமைய மூன்று பகுதி களுக்கான விலை குறிப்பீடு களை முன்வைக்க இந்திய அரசாங்கத்திற்கு சொந்தமான ஓ.என்.ஜி.சி.நிறுவனம் முன் வந்துள்ளது.***

மன்னார் கடற்படுகையில் தற் போது வெற்றிகரமான முறையில் எரிபொருள் அகழ்வு பணிகளில் ஈடுபட்டு வருகின்ற கெய்ன் நிறு வனத்துடன் இணைந்தே ஓ.என். ஜி.சி நிறுவனம் அதற்கான விலைக் குறிப்பீடுகளை முன்வைத்துள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிககின் றன.



தற்போது கெய்ன் நிறுவனம் மன்னாரின் ஒரு கடற்படுகையில் ஐதரோகார்பன் அகழ்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

கெய்ன் நிறுவனத்துடன் இணைந்து எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகமான ஓ.என்.ஜி.சி விலை குறிப்பீடுகளை முன்வைக்க நடவடிக்கை எடுத்துள் ளது.

மன்னார் கடற்படுகையில் ஐதரோகார்பன் அகழ்வுக்கான இரண்டாவது அனுமதிப்பத்திரத் திற்கான விலை குறிப்பீடுகள் இம் மாதம்29ஆம்திகதியுடன்நிறைவடை கின்றன.

2014 ஆம் ஆண்டு முதலாவது காலாண்டில் இரண்டாவது அகழ்வு பணிகளுக்காக அனு மதியை வழங்க பெற் றோலிய வள அபிவி ருத்தி செயலகம் தயா ராக உள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக் கின்றன.

மன்னாரில் ஐத ரோகார்பன் இரண் டாம் கட்ட அகழ்வுக ளுக்காக அனுமதிப்பத் திரத்தை பெறுவதற்கு ஏற்கனவே உலகின் முன்னிலை எரிபொருள் அகழ்வு நிறுவனங்கள் பல விருப்பம் தெரிவித்துள்ளதாக பெற்றோலிய வள அபிவிருத்தி செயலகத்தின் பணிப் பாளர் நாயகம் சாலிய விக்கிர மசூ ரிய இதற்கு முன்னர் தெரிவித்திருந் ததாக குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# பணமோசடி செய்த நபர் பொலிஸாரால் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் பலரிடம் பண மோசடி செய்த நபர் ஒருவர் வவு னியா பொலிஸாரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்



இது தொடர்பில் மேலும் தெரி யவருவதாவது, வவுனியாவில் உள்ள பல கிராமங்களை சேர்ந்த மக்களிடம் வங்கிக் கடன், வேலை வாய்ப்பு மற்றும் வாகனம் எடுத்து தருவதாக கூறி பல இலட்சக்கணக் கான பணத்தைப் பெற்று இவர் ஏமாற்றியுள்ளார்.

வவுனியாவில் இயங்கும் தனி யார் நிறுவனம் ஒன்றில் கடன் வாங்கித் தருவதாக கூறி போலி யான விண்ணப்பங்களை கொடுத்து பல தொகைப் பணம் வாங்கியுள் ளார்.




குறித்த நபரை பாதிக்கப்பட்ட மக்கள் தேடி அலைந்துள்ளனர். அவரால் வழங்கப்பட்ட தொலை பேசி இலக்கங்கள் செயலிழந்து காணப்பட்டிருந்தன.

பின்னர் தலைமறைவாகி யிருந்த நபரை பிடித்து வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்ற னர். (அ-250)


வவுனியா விபுலானந்தா கல்லூரியின் 2013 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 52 மாணவர்களுக்கான கௌரவிப்பு மற்றும் பாராட்டுவிழா அண்மையில் இடம்பெற்றது. நிகழ்விற்கு முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் ஆகியோர் உள்ளிட்ட விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவி ஒருவர் கௌரவிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.எள

# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
# VACANCIES

**Applications are invited by me up to 18.12.2013from suitably qualified persons for the following posts.**

### 1.POST-WORKS ENGINEER [CIVIL] GRADE III(Faculty of Engineering, Kilinochchi)

**Qualifications:**

(A) Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University / Higher Educational Institution.

OR

(B) Should possess a National Diploma in Technology specializing in Civil Engineering or equivalent, with at least seven (07) years of experience in Civil Engineering works in a recognized establishment.

**NOTE**: - The in-plant training period will not be counted for the period of experience.

**Method of Recruitment** : Selection by a structured interview.Applicants who have scored 40% marks or above at the interview are eligible to be considered for selection.

**Salary Scale**: U-EX1 (II) -2006A- Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12X645 -36,160/- p.m.

### 2.UNIVERSITY MEDICAL OFFICER (University of Jaffna)

The University is looking for a highly motivated individual. Training in counseling will be an added qualification.

**Qualifications:**

Medical Degree of a recognized University with at least 3 years experience as Medical Practitioner.

NOTE: One year period of service as Intern Medical Officer will be considered for the required period of experience.

Granting for study leave to the selected candidates to obtain post graduate qualifications or experience according to the requirements of the University may be considered, subject to exigencies of service.

**Salary Scale**: U- MO 1 (II) - Rs. 28,360 – 10 x 645 ; 1 x 790 – 35,600/- p.m.
**Selection By** : Interview.

### 3.MARSHAL, GRADE II (University of Jaffna)

**Qualifications:**

1·A Graduate from a recognized University
2.Age between : 30 - 45 years
3.Physique: Height : 5' 5"
Chest: 32" deflated

**Note**:-

Preference will be given those who show record of active participation in Sports Activities, Social Welfare Activities within the University or at National Level and those who have a background of Police or Armed forces.

**Salary Scale**: U-MN 2 (II) - Rs.19,470 – 18 X 245 - 23,880/- p.m.
**Selection By** : Interview.

### 4.POST – CURATOR (LANDSCAPE), GRADE III (University of Jaffna)

**Qualifications:**

(1). Should possess a four year special Degree in Agriculture or Agricultural Technology & Management and majoring in Crop Science/Horticulture/ Floriculture/Forestry from a recognized University /HEI with not less than one (01) year of experience in landscaping in a State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

OR

(2).Should possess a four year special Degree in Botany of a recognized University/HEI with not less than two (02) years of experience in Landscaping in State/Corporation or reputed Private Sector organization in supervisory capacity.

**Salary Scale**: U-EX1 (II) -Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12X645 -36,160/- p.m.
**Selection By** : Interview.

### 5.POST – CHIEF SECURITY OFFICER, GRADE II (University of Jaffna)

**Qualifications:**

1.An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the other Armed Services.

OR

2.A Person who possesses a degree from a recognized University/ Higher Educa tional Institutions with not less than five (05) years experience in Security work.

OR

3.A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

**Salary Scale**: U-EX 1(II) - Rs. 26,020-3X585-27,775(EB) 28,420;12 X 645 -36,160/- p.m.
**Selection** : By Structured Interview

### 6.POST OF PUBLIC HEALTH INSPECTOR, GRADE III (University of Jaffna)

**Qualifications:**

Should have passed the Public Health Inspectors examination conducted by the Department of Health.

**Salary Scale** : U-MT 1 (IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.
**Selection** : By Interview

### 7.POST OF PUBLIC HEALTH NURSE (University of Jaffna)

**Qualifications:**

a.Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 12 years experience as a Nurse of which 8 years should be either in Student Health Service or Public Health Service in a recognized Institution.

OR

b.Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council and 10 years experience as a Nurse and possessing post primary qualifications in any aspects of nursing.

**Salary Scale** : U-MT 1(II) - Rs. 18,360 – 7x185; 9x245 – 21,860 p.m.
**Selection** : By Aptitude Test and Interview

### 8.POST OF NURSING OFFICER, GRADE II (University of Jaffna)

**Qualifications:**

i·GCE (Ordinary Level) Examination in Six subjects at not more than two sitting with credit passes in three subjects.

**AND**

ii·Certificate of competence as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.
**Selection** : By Aptitude Test and Interview

### 9.POST OF NURSING OFFICER (DENTAL), GRADE II (University of Jaffna)

**Qualifications:**

i.Pass in 6 subjects at the GCE (O/L) Examination including 5 credits obtained in not more than two sittings. The credit passes should include Science and Mathematics.

**AND**

ii·Three (03) Advanced Level passes in Science subjects in one sitting.

**Salary Scale** : U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.
**Selection** : By Practical Test and Interview

### 10.POST OF PHARMACIST (LOWER GRADE) (University of Jaffna)

**Qualifications:**

Certificate of competence as a qualified Pharmacist recognized by the Sri Lanka Medical Council.

**Salary Scale** : U-MT 1(IIIA) - Rs. 16,535 – 7x155; 10x185 -19,470 p.m.
**Selection** : By Aptitude Test and Interview

### 11.POST OF SUB-WARDEN (FULL TIME) GRADE II (MALE & FEMALE)

**(Faculty of Engineering, Faculty of Agriculture, Kilinochchi and University of Jaffna)**

**Qualifications :**

i.A graduate of a recognized University.
ii.Preference will be given :
a.Who have experience in administration and management of hostel.
b.Who have experience in handling the matters related to students' welfare and discipline.

**Note:**

⅄ The successful applicant should reside in the Students' hostel of Faculty of Agriculture, Kilinochchi. But, he/she cannot reside with his/her family.

⅄ The successful candidate should pay a refundable security deposit of Rs.10,000/=, this amount shall be deducted from their salary in 10 instalments.

**Salary Scale** : U-MN3 (II) - Rs.22,240-18x320-28,000 p.m
**Selection** : By Test and Interview

### 12.POST OF SUPERVISOR (MAINTENANCE), GRADE III

**(Faculty of Agriculture, Kilinochchi and University of Jaffna)**

**Qualifications:**

i.G.C.E(Ordinary Level) Examination in six subjects at not more than two sittings with credit passes in Sinhala/Tamil/English Language/Literature and Arithmetic/ Commercial Arithmetic/Mathematics.

**AND**

ii.At least 3 years' experience in Labour supervision.

**Salary Scale** : U-MN1 (III A) - Rs.16,070-17x155-18,705 p.m
**Selection** : By Aptitude Test and Interview

### 13.POST OF DAIRY ASSISTANT – ANIMAL HUSBANDRY, LOWER GRADE

**(Faculty of Agriculture, Kilinochchi)**

**Qualifications:**

i) G.C.E. (Ordinary Level) Examination in 6 subjects at not more than 2 sittings.

**AND**

ii) Successful completion of one year's practical training course in Animal Husbandry conducted by the Department of Agriculture or equivalent.

**Salary Scale** : U-MT1 (IIIA) - Rs.16,535-7x155;10x185-19,470 p.m
**Selection** : By interview

**AGE LIMIT** : **Not more than 45 years for the above all posts.**

**Note:** ***Age limit is not applicable for applicants in the Government departments/ State Corporation and statuary bodies.***

**STATUTORY BENEFITS**

1·Allowances approved by the University Grants Commission.
2·Membership in Universities Provident fund and Pension Scheme in the University Scheme.
3·Gratuity payment.
4·Employment trust fund.
5·Free Medical Care.

Application should be made on the forms available in the office of the Senior Assistant Registrar/ Establishments (Non –Academic) of this University on payment of Rs.100/- for each application form at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms by post should send a Money Order/ Postal Order to the value of Rs.100/- in the name of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m. in size. Only Applications sent on the specified form will be accepted.

Applicants from Government Departments/ State Corporations/ Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments/ Corporations/Boards.

Applications received after the closing date and illegible and incomplete applications will be rejected without intimation.

REGISTRAR
19/11/2013

அரைக்கொத்து அரிசி அன்னதானம்
விடிய விடிய மேளதாளம்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## காலைத் தொட்டுப் பார்த்த கமரூனின் இரக்கம் கண்டு நெகிழ்ந்தோம்!

பொதுநலவாய மாநாட்டை நடத்தியதும் போதும் பட்டபாடும் போதும் என்பது அரசின் தற்போதைய நிலைமை.

பொதுநலவாய மாநாட்டை சிறப்பாக நடத்திக் காட்டுவதன் மூலம் இலங்கைக்குப் பெருமை சேர்க்கலாம் என்று நினைக்க, நடந்ததோ வேறு; கதைவேறாயிற்று.

இதைத்தான் பிள்ளையார் பிடிக்க குரங்கான கதையென்று சொல்வார்கள்.

என்ன செய்வது எல்லா நேரங்களிலும் உள்நோக்கம் கொண்ட திட்டங்கள் வெற்றியளிப்பதில்லை என்பதற்கு இலங்கையில் நடந்த பொதுநலவாய மாநாடும் நல்ல எடுத்துக்காட்டு.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதில்லை என்ற இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கின் அறிவிப்பு அபசகுனமாயிற்று. அதனைத் தொடர்ந்து பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கை வந்திருந்த பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ததால் அரசுக்கு பலத்த இழுக்கை ஏற்படுத்திவிட்டது.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த பிரிட்டிஷ் பிரதமர் கமரூனை எங்கள் தமிழ் அரசியல் தலைமைகள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளாவிடினும் தமிழ் மக்களின் உணர்வுகளை - அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை கமரூன் உணர்வுபூர்வமாக புரிந்து கொண்டார் என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் தமிழ் மக்களின் அவலம் கண்டு உள்ளத்தால் நெகிழ்ந்து போனார்.

வள்ளுவன் கூறுவதுபோல்"..... புன் கணீர் பூசல் தரும்" என்பதற்கு ஈடாக கமரூன் தமிழ் மக்கள் மீது அளவுகடந்த அன்பும் இரக்கமும் கொண்டார் என்பதற்கு தமிழ் அன்னை ஒருவர் மீது அவர் காட்டிய கருணை சான்றுப்படுத்தும்.

வள்ளுவர் கூறுவது போல் அவர் கண்ணீர் சிந்தி தன் அன்பின் வெளிப்பாட்டைக் காட்டவில்லையாயினும் போர்ச் சூழலில் ஒரு காலை இழந்து பொய்க்கால் அணிந்திருந்த தமிழ்த் தாய் ஒருவரின் காலைப் பிடித்து நடந்தது என்ன? என்று பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் விசாரித்தார் என்றால், அது அவர் நம்மீது கொண்ட அன்பின் அடையாளம் என்பதை எங்ஙனம் மறுதலிக்க முடியும்?

பிரிட்டிஷ் நாட்டின் பிரதமர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து இடம்பெயர்ந்த மக்களின் அவலங்களைப் பார்வையிட்டு; ஒரு குடிசைக்குள் நுழைந்து, காலை இழந்த சோகத்தோடு இருந்த தாய் ஒருவரின் காலைப்பிடித்து கருணை காட்டினார் என்றால், பிரிட்டன் தமிழ் மக்களுக்கு நிச்சயம் உதவும் என்பதை கமரூன் உறுதிபடக் கூறுகிறார் என்பதே அதன் பொருள். அதற்கான குறியீட்டு மொழியாகவே மேற்போந்த சம்பவத்தை நோக்க முடியும்.

ஆம், பொது நூலகத்தில் தமிழ் அரசியல் தலைமைகளுடனான சந்திப்பின் போது கோட் சூட்டுடன் வந்திருந்த பிரதமர் கமரூன்; வலிவடக்கில் இடம்பெயர்ந்த மக்களைச் சந்திக்கச் சென்ற போது, கோட்டைக் கழற்றி சேட்டுடன் சென்றிருந்தார் என்பதற்குள் அவரின் உயர்ந்த பண்பாடு பரிணமிக்கின்றது என்பதை நினைக்கும் போது நம் கன்னத்தின் ஓரங்கள் நனைகின்றன.

கூடவே, எங்களவர் கோட்சூட்டுடனே சென்றனர் என்பதை நினைத்தபோது உடலில் எழுந்த வெப்பம் கன்னத்தின் ஈரத்தைக் காய்ச்சிக்கொண்டது. கடவுளே! பிரிட்டிஷ் ஆட்சிக்கு இனியும் ஒரு சந்தர்ப்பம் இங்கு கொடு என்று ஏழை மனம் மன்றாடவே செய்கிறது.

# இலங்கையில் ஊடகப் பணி ஆபத்து நிறைந்தவை

## சனல் 4 ஊடகவியலாளர் மில்லர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களிற்கு மத்தியில் பாதிக்கப்பட்ட மக்களிற்காக இங்குள்ள ஊடகவியலாளர்கள் பணிபுரிவதனை அவதானிக்க முடிகின்றது என்பதை சுட்டிக் காட்டி சனல் - 4 ஊடகவியலாளர் ஜொனதன் மில்லர் இலங்கை பத்திரிகையாளர்களுக்கு பகிரங்க கடிதமொன்றினை எழுதியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இங்கு இராணுவத்தினரும், புலனாய்வாளர்களும், பொலிசாரும் ஊடகவியலாளர்களினை கண்காணிப்பு நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர் என்பதனையும் எம்மால் அறிய முடிகின்றது.

உங்களது கஷ்டங்களும் உங்கள் உயிர்கள் மீதுள்ள ஆபத்தும் தான் உங்களினை நான் சந்திப்பதற்கு தூண்டுதலாக இருந்தன.

கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டினை முடித்துக்கொண்டு தமது நாட்டிற்கு திரும்பும் போதே இப்பகிரங்க கடிதத்தினை மில்லர் சமூக வலைத்தளங்களில் ஒன்றான வலைப்பூவில் (blogs) பதிவு செய்துள்ளார்.

எனது சனல் 4 தொலைக்காட்சி இங்கு செய்தியினை சேகரிக்க விடாமல் புலனாய்வாளர்கள், பொலிஸார் மற்றும் குடியேற்ற அதிகாரிகள் தொடர்ந்து வன்முறைகளினை பிரயோகித்து வந்தனர்.

ஆனால், இவ்வன்முறைகளுக்கு மத்தியிலும் நீங்கள் துணிச்சலுடன் இருந்து மற்றவரின் துரதிர்ஷ்டத்தினை வெளிக்கொண்டு வருகின்ற ஒரு நல்ல சுந்தர்ப்பத்தினை உங்களிடம் கண்டேன்.

இங்கு பத்திரிகைச் சுதந்திரம் எமது தொலைக்காட்சிக்கான சுதந்திரம் என்பன இல்லாமலே உள்ளது.

எமது பணியின் நிமிர்த்தம் இரகசியமாக சில முகவர்களின் துணையுடன் வடக்கிற்கு புகையிரதம் மூலம் சென்று கொண்டிருந்தோம்.

ஆனால், அரசு சார்பு ஆர்ப்பாட்டக்காரர்களால் நாம் தடுக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டோம்.

போர்த் தவிர்ப்பு வலய இயக்குனர் கெலும் மக்றே மற்றும் எமது சக நண்பர்கள் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என இங்குள்ள சில தொலைக்காட்சிகள் உண்மைக்கு புறம்பாக ஒளிபரப்புச் செய்திருந்தன.

ஜனாதிபதியின் ஊடகவியலாளர் மாநாடுகளில் கலந்து கொள்வதில் அர்த்தமில்லை என நான் கருதுவதோடு ஏற்றுக்கொள்ளப்பட்ட பத்திரிகையாளர் பட்டியலில் இருந்து எமது பெயர் நீக்கப்பட்டமைக்கு நாம் அதிருப்தியினையும் கோபத்தினையும் தெரிவித்து கொள்கின்றோம்.

நாங்கள் உங்கள் நாட்டின் மீது அன்பு வைத்துள்ளோம். நாம் இங்கு இருந்தபோது தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் எம்மிடம் சில கோரிக்கையினையும் இரகசிய ஆவணங்களையும் கையளித்திருந்தனர்.

நாம் இங்கு வருவதற்கு அச்சுறுத்தல் இருந்தது. ஆனால், இவ் அச்சுறுத்தலை விட எமக்கு நீங்கள் பாதுகாப்பான அடையாளமாக இருந்தீர்கள்.

ஜனாதிபதியின் ஊடகவியலாளர் மாநாட்டில் நான் பங்கேற்றிருந்தால் ஒரு சுதந்திர ஜனநாயக நாட்டில் என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்பதனை உங்கள் ஜனாதிபதிக்கு உணர்த்தியிருப்பேன்.

உங்கள் வாழ் நாள் பெரும் ஆபத்தினை கொண்டது. நாம் ராஜபக்ஷ சகோதரர்கள் குறித்து விமர்சனம் எழுதுவது கடினமாகவிருக்கும், நீங்கள் இராணுவம் பற்றி எழுத முடியாததோடு எம்மைப்போல் பெயரும் குறிப்பிட முடியாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு ஊடகவியலாளர்களின் படுகொலைகள், காணாமல் போனவர்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் நான் இந்த கடிதத்தினை எங்களுடைய பாதுகாப்பின் நிமிர்த்தமும் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் விமானத்தில் இருந்தபடியே எழுத வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளேன்.

நீங்கள் அடக்குமுறைகளிற்கு மத்தியில் ஊடகப்பணியினை மேற்கொள்கின்றீர்கள். இதனாலேயே நான் உங்களினை சந்திப்பதற்கு விரும்பினேன்.

நான்மீண்டும் இலங்கைவர கடவுளை பிரார்த்திக்கின்றேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை சனல் 4 இன் செய்தியாளர் ஜோன் ஸ்னோ யாழ். வந்திருந்தபோது அவரினை சந்தித்த ஊடகவியலாளர்களினை அவதானமாக இருக்குமாறு கூறிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (அ-4)

## பேருந்து தரிப்பிடங்களை அமைத்துத் தரக் கோரிக்கை

(துனங்களப்பு)

ஏ-9 வீதியின் பிரதான இடங்களில் அமைக்கப்பட்டிருந்த பேருந்து தரிப்பிட நிலையங்கள் வீதி அகலிப்பின் போது அகற்றப்பட்ட நிலையில், இதுவரை அவ்விடங்களில் தரிப்பிட நிலையங்கள் அமைக்கப்படவில்லை.

குறிப்பாக நுணாவில் சந்தி, கைதடி நுணாவில் சந்தி, கைதடி சந்தி போன்ற இடங்களில் பேருந்து தரிப்பிட நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இவையனைத்தும், வீதி அகலிப்பின் போது அகற்றப்பட்டது. ஆயினும் வீதி புனரமைப்பு வேலைகள் நிறைவடைந்து ஆறுமாதங்களுக்கு மேலாகியும் இதுவரை பேருந்து தரிப்பிட நிலையங்கள் மீள அமைத்துக் கொடுக்கப்படவில்லை. இதனால், பயணிகள் மழை, வெயில் காலங்களில் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, உரியவர்கள் மக்களின் நலன் கருதி குறித்த இடங்களில் பேருந்து தரிப்பிட நிலையங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

(செ-9-37)

## பரீட்சைக்கான இலவசக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்றவுள்ள அதிபர்கள், ஆசிரியர்களுக்கான இறுதி வழிகாட்டல் இலவசக் கருத்தரங்கு யாழ். மாவட்ட கிளையினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இன்று பிற்பகல் 2.15 மணி தொடக்கம் பிற்பகல் 6.00 மணிவரை நடைபெறும் இக்கருத்தரங்கில் கலந்து பயன்பெறுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளர் எஸ். லோகேஸ்வரன் கேட்டுள்ளார்.

இதில் பொருத்தமான வளவாளர்கள் கலந்து கொள்வதாலும் இறுதி கருத்தரங்காக இது அமைவதாலும் பயனுறுதிமிக்கதாக அமையுமென அவர் தெரிவித்துள்ளார். (அ-4)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கடவுளுக்கு அர்ப்பணிப்போம்



❖ இறைவன் வெளியிலும், வெகு தொலைவிலும் இருப்பதாகத் தோன்றும் வரையில் அஞ்ஞானம் இருக்கும். ஆனால், நம் உள்ளத்துக்குள்ளேயே அவன் இருப்பதாக உணர்ந்து கொண்டால் ஞானம் உண்டாகி விடும்.

❖ தனது இதயத்திற்குள் இறைவனைக் கண்டவன், வெளியுலகத்திலும் அவனைக் காண்பான். தனக்குள்ளே இறைவனைக் காணாதவன், கோயிலிலோ பிற இடங்களிலோ அவனைக் காண இயலாது.

❖ குணத்தாலும், அளவாலும் ஞானம் வேறுபடும். சாதாரண மனிதர்களுடைய ஞானம், ஓர் அறையை மட்டும் பிரகாசமடையச் செய்யும் தீப்சுடரைப் போன்றது. பக்தனுடைய ஞானம் சந்திரனின் பிரகாசத்தைப் போன்றது. அவதார புருஷரின் ஞானம் பலமடங்குசக்தி கொண்ட சூரியப்பிரகாசத்தைப் போன்றது.

❖ இறைவனுக்கு அர்ப்பணம் செய்யும் பொருள்கள் எல்லாம் ஆயிரம் மடங்காக நமக்கே மீண்டும் திரும்பிவிடும். ஆனால், செய்யும் செயல்கள் எல்லாவற்றையும் கடவுளுக்கு அர்ப்பணிக்கும் எண்ணத்துடன் செய்பவர்களை இன்ப துன்பங்கள் தீண்டுவதில்லை.

❖ ஆயிரம் வழிமுறைகளில் முயன்றாலும், இறைவனுடைய அருளில்லாமல் எதனையும் அடைய முடியாது. இறைவனின்கருணை இன்றி யாரும் அவனை உணர முடியாது.

❖ காற்று எங்கும் நிறைந்திருந்தாலும், பாய்மரத்தை அதன் போக்கில் விரித்தால் தான் படகு தடையின்றி செல்லும். அதுபோல இறைவனின் கருணை எங்கும் நிறைந்திருந்தாலும், மனம் என்னும் பாய்மரத்தை அவன் பக்கம் விரித்தால் தான், சாதகமான சூழ்நிலையை அடையலாம்.

# யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் மீள்குடியேற்றத்தை வலியுறுத்தி மீண்டும் தீர்மானம்

## எதிர்ப்பின்றி அமைதியாக இடம்பெற்றது

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்தக் காணியில் மீள்குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் அதேவேள்ள மக்களின் காணிகள் மக்களிடமே வழங்கப்படவேண்டும் என வலியுறுத்தி யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் மீண்டும் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள காணிகளை விடுவித்து மீள்குடியேற்றத்தை விரைவுபடுத்தும் நோக்கில் கொண்டு வரப்பட்ட இந்தத் தீர்மானத்திற்கு எவரும் எதிர்ப்புக்கள் தெரிவிக்கவில்லை என்ற காரணத்தால் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் முதலில் வரவேற்புரையாற்றினார்.

இதன்போது கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பு யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் விளக்கப்பட உதவியுடன் தனது கருத்துக்களை தெரிவித்திருந்தார். அத்தோடு எதிர்வரும் காலங்களில் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளவுள்ள திட்டங்கள் தொடர்பிலும் அவர் விளக்கமளித்திருந்தார்.

இதன்பின்பு தலைமையுரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணிக்க தீர்மானித்துள்ளதாக அக்கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரு மான மாவை சேனாதிராஜா அறிவித்துள்ளதாக வலம்புரி பத்திரிகையில் செய்தி ஒன்று முன்பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொள்ளாமைக்கு காரணமாக வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு இக்கூட்டத்திற்கான இணைத் தலைமை வழங்கப்படாமை கூறப்பட்டுள்ளது.

ஆனால் இந்தக் கூட்டத்திற்கு இதுவரை காலமும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இணைத் தலைமை தாங்கி வந்தார். அத்தோடு இந்தக் கூட்டம் எப்போதும் நடத்தப்பட வேண்டும் என்பது தொடர்பாகவும் இணைத்தலைவர்களே முடிவுகளை எடுத்து வந்தனர்.

ஆனாலும் தற்போது வடக்கிற்கு மாகாண முதலமைச்சர் உள்ள காரணத்தால் அவரே இணைத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அத்தோடு அவருக்கான ஆசனமும் ஒதுக்கப்பட்டுள்ளது உள்ளிட்ட பல விடயங்களை தெரிவித்த அமைச்சர் கூட்டத்திற்கான அழைப்பிதழ் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.





இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டத்தில் பங்கு கொள்ளாமை சிறிது நேரம் சலசலப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதன் பின்பு யாழ். மாவட்ட விவசாய நிலைமைகள் தொடர்பாக முதலில் ஆராயப்பட்ட போது ஆங்கிலத்திலான அறிக்கை பல்லூடகத்தில் காண்பிக்கப்பட்டது.

பல்லூடகத்தின் உதவியுடன் ஆங்கில மொழியில் அறிக்கைகள் காண்பிக்கப்படுவது ஏன் எனக்கேள்வி எழுப்பிட அமைச்சர் எதிர்வரும் காலத்தில் அவ்வாறு செய்யக் கூடாது என அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்ததோடு தமிழ்மொழி முக்கியத்துவப்படுத்தப்பட வேண்டும். இந்த மாவட்டத்தில் பெரும்பான்மையானவர்களின் தமிழ் மொழியை புறக்கணிக்க முடியாது எனவும் சுட்டிக் காட்டினார்.

**வாழ்வின் எழுச்சி திவிநெகும** திட்டத்திற்கு பதிலாக பாராளுமன்றத்திலேயே சட்டமாக்கப்பட்டுள்ள போதும் ஏன் இன்னும் இங்குள்ள அதிகாரிகள் வாழ்வின் எழுச்சிக்கு பதிலாக திவிநெகும என்ற சொல்லை பயன்படுத்துகின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் கேள்வி எழுப்பியதோடு அதனைத் திருத்திக் கொள்ளுமாறும் அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

விவசாய நிலங்களில் கட்டடங்கள் அமைக்கும் நடவடிக்கை யாழ். குடாநாட்டில் அதிகரித்து வருவதனால் உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. இதனைத் தடுக்க கமநல சேவைகள் திணைக்களம் என்ன நடவடிக்கையினை மேற்கொள்கிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அந்த திணைக்களத்தின் பணிப்பாளர் பற்றிக் நிறஞ்சன் வயல் நிலங்களில் கட்டடங்கள் அமைக்கப்படுவதை தாம் தடுத்து நிறுத்த நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக கூறியதோடு ஏனைய விவசாய காணிகளிலும் மேட்டு நிலங்களிலும் கட்டடங்கள் அமைக்கப்படுவதை பிரதேச சபைகள்தான் தடுத்து நிறுத்தவேண்டும் என்றார்.

அதேவேளை, நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட விவசாய காணியில் கட்டடம் அமைக்கப்படுவது தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்ட போது பதிலளித்த செயலாளர் ஆர்.சாந்தசீலன் யாழ்.மாநகரசபையின் அனுமதியின் பேரிலேயே அமைக்கப்பட்டதாக கூறவே கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.



நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் எவ்வாறு யாழ். மாநகரசபை கட்டடம் அமைப்பதற்கான அனுமதி வழங்கமுடியும் என்று கேள்விகளும் பதில்களும் நீண்டு கொண்டே சென்றபோது விவசாய காணிகளில் கட்டடங்கள் கட்டுபவர்களுக்கு எதிராக நீதிமன் றங்களில் வழக்குத் தாக்கல் செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கட்டக்காலி நாய்களின் விவகாரம் படுசூடு பிடித்தது. கால்நடைஉற்பத்தி தொடர்பாக பேசப்பட்டபோதே கட்டாக்காலி நாய்களின் விவகாரத்தை யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள் நுழைத்தார்.

கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்க வைத்தியர்கள் பற்றாக்குறை நிலவுவதாகவும் வைத்தியர்களுக்கு வாகன வசதிகளும் எரிபொருளும் வழங்கப்பட வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்க இலகுவாக இருக்கும் எனவும் குறிப்பிட்ட அந்த திணைக்களத்தின் பொறுப்பாளர் வைத்திய அதிகாரி திருமதி வி. அமிர்தலிங்கம், பால் உற்பத்தியில் யாழ். மாவட்டம் பின்னடைவை கண்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு அவருடைய கோரிக்கைகள் நீண்டுகொண்டே செல்ல கரவெட்டி பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவர் என்று தன்னை அறிமுகப்படுத்தியவர் புல் வளர்ப்பிற்கு போதிய உதவிகள் வழங்கப்படவில்லை என வைத்திய அதிகாரி மீது குற்றம் சாட்ட யாழ்.மாநகர சபை முதல்வரும் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த ஆலோசனை கோரி அனுப்பப்பட்ட கடிதத்திற்கு இன்றுவரை பதில்வரவில்லை என்று குற்றம்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த வைத்திய அதிகாரி கட்டாக்காலிகளைக் கட்டுப்



படுத்துவது எமது வேலையில்லை. கட்டாக்காலி நாய்களை நாங்கள் பிடிக்கத் தேவையில்லை.

பிரதேச சபைகள் செய்ய வேண்டிய வேலையை கால்நடைத் திணைக்களத்தின் மீது திணிக்க வேண்டாம் என்று கூறவே கூட்டத்தில் ஓங்கிஒலித்த கரகோசம் சலசலப்பையும் ஏற்படுத்தியதோடு வைத்திய அதிகாரிக்கு எதிராகவும் கருத்துக்கள் முன்வைக்க தூண்டப்பட்டது.

இருப்பினும் அதற்கு இடங் கொடுக்காத அவர் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை தமக்கில்லை என்று தொடர்ந்து வாதிட்டார்.

இதனைத் தொடர்ந்து மீனவர் பிரச்சினைகள், மரம் வெட்டுதல், மண்ணகழ்தல், கல்வி, சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம் கூட்டுறவுதிணைக்களநடவடிக்கை, சட்டம், ஒழுங்கு, வீதி புனரமைப்பு எனப் பல விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்நிலையில் கூட்டத்தின் இறுதிச் சந்தர்ப்பத்தில் முக்கிய விடயமாக வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கடந்த 23 வருடங்களுக்கு மேலாக தமது சொந்த இடங்களில் மீள்குடியேற முடியாமல் வாழ்ந்து வருகின்றனர் என சுட்டிக்காட்டியதோடு அந்த மக்களை அவர்களின் சொந்தக்காணியில் மீள்குடியேற்றுமாறு வலியுறுத்தி இந்தக் கூட்டத்தில் ஏன் ஒரு தீர்மானத்தை கொண்டுவரக்கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கேள்வி எழுப்பினார்.

இதன்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்கனவே அவ்வாறானதொரு தீர்மானம் இந்தக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது என்று பதிலளித்ததோடு மக்களின் காணிகள் மக்களுக்கே சொந்தம் என்றும் தெரிவித்தார். இதனை இப்பொழுதுமட்டுமல்ல தொடர்ந்து வலியுறுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் ஒருமுறை அவ்வாறான ஒரு தீர்மானத்தை ஏன் கொண்டு வரக் கூடாது எனக் கேள்வி எழுப்பிய பாராளுமன்ற உறுப்பினார் சந்திரகுமார் நினைவுபடுத்தும் வகையில் இந்தத் தீர்மானம் அமையட்டும் எனக்கூறிவாய்மொழி தீர்மானமாக முன்வைத்தார்.பின்பு எதிர்ப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு நேற்றைய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடையிடையே சலசலப்புகளுக்கு மத்தியில் அமைதியான முறையில் இடம்பெற்றுள்ளது.

தொகுப்பு: எஸ்.ஆர்.கரன்

# வட மாகாண அமைச்சுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண அமைச்சுக்களின் அணிகளுக் கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் தற்போது யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகின்றன.

கரப்பந்தாட்டம், வலைப்பந் தாட்டம், துடுப்பாட்டம், உதைபந் தாட்டம், பூப்பந்தாட்டம், கபடி, சதுரங்கம், கரம் போன்ற பல போட்டிகள் இவ்விளையாட்டுப் போட்டியில் இடம்பெறுகின்றன.


இவற்றில், யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வந்த ஆண்களுக்கான கரப்பந் தாட்டம் மற்றும் பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டிகளின் தெரிவுப் போட்டிகளின் அடிப்படை யில் இறுதிப்போட்டிக்கு அணிகள் தகுதி பெற்றுள்ளன.

ஆண்களுக்கான கரப்பந்தாட் போட்டியின் இறுதிப் போட்டிக்கு கல்வி அமைச்சு அணியும் உள் ளூராட்சி அமைச்சு அணியும் தகுதி பெற்றுள்ளன.

அதேவேளை பெண்களுக் கான வலைப்பந்தாட்ட போட்டி களில் 3 அமைச்சுக்களின் அணி கள் மட்டும் பங்குபற்றியிருந்தன. அந்த அணிகளுக்கிடையில் நடைபெற்ற லீக் முறையிலான ஆட்டங்கள் அடிப்படையில் உட் கட்டமைப்பு அமைச்சு அணியும் பிரதம செயலக கொத்தணி அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.


ஆண்களுக்கான துடுப்பாட்ட போட்டிகளின் அரையிறுதிப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை பிற்பகலில் கல்வியங்காடு ஜி.ரி.எஸ் மைதானத்தில் நடை பெற்றது.

இதுவரை காலமும் ஆளுநர் வெற்றிக்கிண்ண போட்டிகள் என நடத்தப்பட்ட மேற்படி போட்டிகள், இவ்வருடம் வட மாகாண அமைச் சுக்களின் அணிகளுக்கிடையி லான விளையாட்டுப் போட்டிகள் என நடத்தப்படுகின்றமை குறிப் பிடத்தக்கது.










இலங்கை கராத்தே சம்மேளத்தினால் 2013ஆம் ஆண்டுக்கான வடமாகாண கராத்தே சுற்றுப் போட்டி அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் பங்கு கொண்ட கிளிநொச்சி மகாதேவா சைவ சிறுவர் இல்ல மாணவர்கள் 90க்கு மேற்பட்ட பதக்கங்களைப் பெற்று சாதனை படைத்துள்ளனர். இவர்களுடன் தலைவர் இராசநாயகம், பிரதம பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜ், நிர்வாக உத்தியோகத்தர் வேலாயுதம் மற்றும் விளையாட்டு ஆசிரியர் கோமளாதேவி ஆகியோரை படத்தில் காணலாம்.

# தெற்காசிய வி. போட்டி யாழ். மாணவன் பதக்கம்

இளையோர் தெற்காசிய விளை யாட்டுப் போட்டிகளில் ஈட்டி எறிதல் போட்டியில் யாழ். மாணவன் டபிள் யு.சி.எல்.லீவிங்டன் வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளார்.

இளையோர் தெற்காசிய விளை யாட்டுப்போட்டிகள் கடந்த வாரம் இந்தியாவில் நடைபெற்று வந்த நிலையில், 21 வயதுப்பிரிவு ஆண் களுக்கான ஈட்டி எறிதல் போட்டி கடந்த 10 ஆம் திகதி நடைபெற்றது.

இப்போட்டியில் 61.07 மீற்றர் தூரம் எறிந்த லிவிங்டன் வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்றுக் கொண் டார்.

யாழ்.மாவட்டம் சார்பாக முதன் முறையாக இளையோர் தெற் காசிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய வீரர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவருக்கு யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர். மோகனதாஸ் பயிற்சிகளை அளித் துள்ளார்.

## நிரந்தர தீர்வைப் பெற...

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் இலங்கையின் வட பகுதிக்கு சென்ற முதலாவது வெளிநாட்டுத் தலைவராக நான் கருதப்படுகின்றேன். நான் ஊடகங் களையும் அழைத்துக் கொண்டே சென்றேன். சர்வதேச சமூகத்திற்கு செவிமடுக்கும் வாய்ப்பை நான் அப்பகுதி மக்களுக்கு வழங் கினேன். சபாநாயகரே, புலிகளின் யுகத்திற்கு மீண்டும் செல்ல வேண்டும் என்ற தேவை யாருக் கும் இல்லை. அதேபோன்று அவர்கள் செய்த மிலேச்சத்தன மாக நடவடிக்கைகளும் மீண்டும் அவசியம் இல்லை. நாம் இலங் கைக்கு மதிப்பளிக்க வேண்டும். இலங்கையில் கடந்த மூன்று தசாப்த காலமாக இரத்தம் சிந்திய யுகம் காணப்பட்டது. அதே போன்று நல்லிணத்திற்கும் காலம் தேவைப்படுகின்றது. எனது விஜயத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு தெளி வாக சில விடயங்களை கூறியுள் ளேன். தியாகங்களை செய்து புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அதனூடாக வெற்றிகரமான எதிர்கால சமூகம் ஒன்றை உருவாக்க முடியும். வட மாகாணத்திற்காக புதிதாக நியமிக் கப்பட்டுள்ள முதலமைச்சருடன் ஒத்துழைப்புடன் செயற்படுமாறும் நான் கேட்டுக் கொண்டேன். அதுவொரு அழகான நாடு. எனவே அனைத்து துறைகளிலும் ஏற்படும் நல்லிணக்கத்தின் ஊடாகவே இலக்குகளை எட்டமுடியும். நியா யத்தையும் நீதியையும் வழங் குவதன் மூலம் சிறந்த நிலையை அடைந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அந்த சந்தர்ப் பத்தை பயன்படுத்திக் கொண்டால் எதிர்காலம் வளம் பெறும். சபா நாயகரே, பொதுநலவாய மாநாட் டின் போது எனக்கு சில தெரிவுகள் இருந்தன. மாநாட்டின் செயற்பாடு களில் இருந்து ஓரளவு வெளியேறி, அதன் நிகழ்ச்சி நிரலை தமக்கு வேண்டிய விதத்தில் செயற்படுவ தற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு சந்தர்ப்பம் வழங்குதல் அல்லது எமது அபிலா சைகளை முன்நிறுத்தி அந்த நிகழ்ச்சி நிரலை குழப்பி இலங்கை தொடர்பில் சர்வதேச சமூகத்தின் கவனத்தை திருப்பியி ருக்க முடியும். எனினும் பொது நலவாய மாநாட்டின் பெறுமதியை நான் தெரிவு செய்தேன். அதற்காக நான் அனைத்தையும் செய்தேன். அதுவே நான் இலங்கை தொடர் பிலும் பொதுநலவாய மாநாடு தொடர்பிலும் எடுத்த சிறந்த தீர்மானமாகும். அத்துடன் பிரித் தானியா சார்பிலும் எடுத்த சிறந்த தீர்மானமாகும்" எனத் தெரி வித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் எட். மிலிபேன்ட் (தொழிலாளர் கட்சி) தெரிவித்த கருத்து :-

"இந்த சபை பயங்கரவாதத்தை எதிர்ப்பதுடன், இலங்கையில் என்ன நடந்தது என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றது. குறிப்பாக 2009 ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொலை செய்யப் பட்ட சம்பவங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தியுள்ளோம். நான் இங்கு சில கேள்விகளை கேட்க வேண்டும். கடந்த மே மாதம் பிரதிப் பிரதமர் இந்த சபைக்கு ஒரு விடயத்தைக் கூறினார். அவரு டைய கூற்றை மேற்கோள் காட்டி வினவுகின்றேன். பொதுநலவாய மாநாட்டிற்கு தயாராகும் நிலையில் இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலான அர்ப்பணிப்பை தொடர்ந்தும் கவனத்திற் கொள்ளாது செயற்படு மாயின் உண்மையில் அதன் பிரதிபலனை அனுபவிக்க வேண்டி ஏற்படும். எனவே இலங்கை எந்தப் பிரதிபலனை எதிர்நோக்கும் என்பதனை பிரதமர் முதலில் கூற வேண்டும். இரண்டாவது விடயம் அடுத்த மார்ச் மாதமாகும் போது இலங்கை யுத்தக் குற்றங்கள் தொடர்பிலான உள்ளக விசார ணைகளை நிறைவு செய்திருக்க வேண்டும் என கடந்த வெள்ளிக் கிழமை மாநாட்டின் போது எமது பிரதமர் கூறினார். எனினும் ஞாயிற்றுக் கிழமையாகும் போது இலங்கை ஜனாதிபதி அதனை நிராகரிப்பது போன்று தெரியவந் தது. சபாநாயகரே, மனித உரிமை மீறல் விவகாரங்களில் இலங்கை யின் செயற்பாடுகள் பொதுநலவாய அமைப்பின் சிறந்த பயணத்திற்கு முரணானது. எனவே அவர் களுக்கு இது தொடர்பில் ஓய்வு வழங்க முடியாது. தவறு செய்த வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பிரித்தானியாவினால் செய்ய முடியுமான அனைத்தை யும் செய்வோம். இலங்கை அரசாங்கம் அதற்காக செயற்படு மாயின் நாம் அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம்." எனத் தெரிவித்தார்.

இதற்கு பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்த கருத்து :-

"இலங்கை தொடர்பிலான எமது நிகழ்ச்சி நிரல் குறித்து அழுத்தம் கொடுத்தீர்களா என்றே கேட்கின்றீர்கள். நாம் நேரடியாக சில விடயங்கள் தொடர்பில் பேசினோம். காணி மறுசீரமைப்பு தொடர்பில் பேசினோம். மனித உரிமையின் பெறுமதி தொடர்பில் பேசினோம். சுயாதீன விசாரணை யின் முக்கியத்துவம் தொடர்பில் பேசினோம். அதேபோன்று ஏனைய தலைவர்களும் தமது தீர்மானங் களுக்கு வரவேண்டும். பொதுநல வாய அமைப்புடன் நேரடி தொடர்பு வைத்துள்ள வேறு எந்த நாடும் இந்த மண்ணில் இல்லை. அதன் காரணமாகவே அந்த மாநாட்டில் கலந்து கொண்டு தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், நல்லிணக் கத்திற்காகவும் செயற்படுமாறு கூறி யுள்ளோம். அதனை இங்கு வீட்டில் இருந்து செய்ய முடியாது" என்றார். (செ-11)

## சித்திரவதை...

2009ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டு வரையில் இடம்பெற்ற சித்திரவதைச் சம்பவங்கள் தொடர்பில் முதல் கட்டமாக நாடு முழுவதிலும் எதிர்வரும் பத்து மாதங்களுக்கு சுயாதீன விசார ணைகள் நடைபெறவுள்ளதாகவும்,

இந்த விசாரணைகளுக்கு பொதுநலவாய நாடுகள் செயலகம் நிதி உதவி வழங்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார் (செ-11).

# சந்திரசிறியும், விக்னேஸ்வரனும் கூட்டத்திற்கு வருகை தரவில்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ் வரன் உள்ளிட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் நேற்று இடம் பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கி ணைப்பு குழுக்கூட்டத்தில் பங்கு கொள்ளாத அதேவேளை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி யும் பங்கு கொள்ளவில்லை.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இணைத் தலைவராக அறிவிக்கப்படாத காரணத்தால் கூட்டத்தை புறக் கணிப்பதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவெடுத்துள்ளதாக நேற்று முன்தினம் அக்கட்சியின் பொதுச் செயலாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பின ருமான மாவை சேனாதிராஜா அறிவித்திருந்தார். இந்த அறிவிப் பின் பிரகாரம் நேற்றைய கூட்டத் தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் சார்பில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

அதேவேளை வடக்கு ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறியும் கலந்து கொள்ள வில்லை.

கடந்த காலங்களில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பக்குழுவின் இணைத்தலைவராக ஆளுநர் செயற்பட்டிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (செ-6)

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.

அழையுங்கள். 0779086737 Computer Repair

GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.


# பிள்ளைகளை இழந்த...

குற்றச்சாட்டுகள் உண்மையாகி விடாது என பெற்ற பிள்ளைகளை இழந்து தவிக்கும் தாய்மார்களை கொச்சைப்படுத்தி, முரளிதரன் பேசியுள்ளதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

காணாமல் போன தங்கள் பிள்ளைகளை தேடியலையும் தாய்மார்களை கொச்சைப்படுத்தி, முத்தையா முரளிதரன் மாற்று வரலாற்றில் இன்று இடம்பிடித்து விட்டார்.

1995-ம், 1996-ம் வருடங்களில் அவுஸ்திரேலிய நடுவர்கள் டெரலும், எமர்சனும், முரளிதரனின் பந்து வீச்சை குற்றம் சாட்டிய போது அது தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிரிக்கெட் உலகம் கோரியது.

அதையடுத்து சர்வதேச கிரிக்கெட் சபை ஒரு விற்பன்னர்களின் குழுவை நியமித்து முரளிதரனின் உடம்பில் ஆய்வு உபகரணங்களை பொருத்தி, கையை அளந்து பார்த்து மருத்துவ பரிசீலனை செய்து, பந்துவீச்சை படம் பிடித்து ஆராய்ந்து தீர்ப்பு வழங்கியதை முரளிதரனுக்கு நான் ஞாபகப் படுத்துகிறேன்.

அவர்மீது சுமத்தப்பட்ட இந்த பாரிய குற்றச்சாட்டு தொடர்பில் கிரிக்கெட் பற்றி எந்தவித அறிவும் இல்லாத அரசியல்வாதிகள் கருத்து கூறுவதும், அதைவிட இதுபற்றி விசாரிக்காமலேயே தீர்ப்பு கூறுவதும் எந்த அளவுக்கு பொருத்தமற்றதாக இருந்ததோ, அதைவிட இன்று முரளிதரன், இந்நாட்டில் காணாமல் போனவர்களின் மனித உரிமை விவகாரம் தொடர்பில் கருத்து கூறுவது முட்டாள்தனமானது.

இவருக்கு இவரது அரசாங்கத்தின்கற்றுக்கொண்ட ஆணைக் குழு பற்றியும் தெரியவில்லை, ஐநா மனித உரிமை ஆணைக் குழு பற்றியும் தெரியவில்லை.

இந்த கிரிக்கெட் வீரரின் இந்த கூற்று, மனித உரிமைகளுக்காக இந்நாட்டில் போராடும் தமிழ, சிங்கள, முஸ்லிம் மனித உரிமை போராளிகளையும், தமிழகத்திலும், உலகம் முழுக்கவும் மனித உரிமை போராட்டங்களை நடத்தி வரும் உணர்வாளர்களையும் மிக கடுமையாக அவமானப்படுத்தியுள்ளது.

கடத்தப்பட்டு, கொல்லப்பட்டு, கைது செய்யப்பட்டு, கப்பம் வாங்கப்பட்டு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட மக்களுக்காக போராடும் மனித உரிமை போராளிகளை, தனது பொறுப்பற்ற கருத்தின் மூலம் முட்டாள்களாக முரளிதரன் அடையாளப் படுத்தியுள்ளார்.

பொறுப்பற்ற விளையாட்டுத் தனமான தனது இந்த கருத்து தொடர்பில் பந்துவீசி விளையாடும் விளையாட்டு வீரர் முத்தையா முரளிதரன் பொதுமன்னிப்பு கோரி விளக்கம் அளிக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவரும், மனித உரிமை மக்கள் கண்காணிப்பு குழு ஏற்பாட்டாளருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (செ-11)


# பதவி வெற்றிடம்

- பக்க வடிவமைப்பாளர்கள்
- போட்டோசொப் டிசைனர்

தகைமையுடையவர்கள் 21.11.2013 அன்று பிற்பகல் 3.30மணிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

**குறிப்பு:**

அண்மித்த தூரத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**இல.3, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

**பொதுமுகாமையாளர்,**
**வலம்புரி**


# போரினால் பாதிக்...

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கினார். கொழும்பில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் வடமாகாணத்தைச் சேர்ந்த 1200 பேருக்கு இவ்வாறு ஏற்கனவே ஜனாதிபதியினால் இத்தகைய நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும், அந்த வகையில் இரண்டாவது தொகுதியாக வவுனியாவில் இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக அமைசசர் கஜதர தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும், அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக யுத்தத்தில் பாதிக்கப் பட்ட குடும்பங்களுக்கு உதவி நிதியாக இந்தக கொடுப்பனவு வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு ஒரு லட்ச ரூபாய் வழங்கப்படுகின்றது. இதனை அவர்களுக்கு வழங்கப்படுகின்ற நட்டஈடாக நாங்கள் கொடுக்கவில்லை. ஏனெனில் அவர்களுடைய இறப்புக்கு அரசாங்கம் காரணமல்ல என அந்த நிகழ்வில் அமைச்சர் கஜதீர தெரிவித்தார்.

எனினும், பாதிக்கப்பட்டுள்ள அவர்களுக்கு சிறிய ஆறுதலைத் தரும் வகையிலான உதவியாகவே அரசு இந்த நிதியை வழங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த உதவி இன பேதமின்றி பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைவருக்கும் வழங்கப்படுகின்றது எனவும அவர் கூறினார். அவருடன் அமைசசர் ரிஷாத் பதியுதீனும் இந்த நிகழ் வில் பங்குபெற்றுள்ளார். (செ-11)

# மன்மோகன் சிங்...

அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற இயலாத நிலை ஏற்பட்டிருந்தது. இம்மாதம் பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதங்கள் ஒருமாத காலமாக தொடர்ந்து நடக்கவிருக்கும் நிலையில் அதற்கு முன்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடத்த அதன் வழமையான ஒழுங்கு முறைகளுக்கேற்ப ஏற்பாடு செய்யும்படி குழுவின செயலாளரான மாவட்ட அரசாங்க அதிபருக்கு அறிவித்திருந்தேன்.

இதனை தவறான புரிதல்களுக்கு உள்ளாக்கியதால் வடக்கு மாகாண முதல்வர், ஏனைய உறுப்பினர்கள், நகர பிரதேச சபைகளின் பல உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தார்கள்.

அதைப்பற்றி கலந்துரையாடி அதனது நடைமுறைகள் தொடர்பில ஆராய இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருந்தது. இருப்பினும அவர்கள் கலந்து கொள்ளாதது துரதிர்ஷ்ட வசமானதாகும்.

மாகாண சபை முறைமையை பாதுகாக்கும் பொறுப்பும் கடமையும எமக்கு உண்டு.

இதனை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். ம[illegible] நலன்சார்ந்து மாகாண முதல்வர் முன்னெடுக்கும் நடவடிக்கைகளு[illegible] நாம் நிச்சயம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு மிகவும் சிறப்பாக எதிர் பார்த்ததை விட சிறப்பாக நடைபெற்றது. இது அரசுக்கு கிடைத்தவெற்றியாகும்.

இந்தியப் பிரதமரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டிருக்க வேண்டும்.

அப்படி ஒருநிலை ஏற்பட்டிருந்தால் நிச்சயமாக எமது மக்களுக்கு பல உதவிகளை அறிவித்திருப்பார். புனர்வாழ்வு திட்டங்களை[illegible] அறிவித்திருப்பார்.

எமது கடற்றொழிலாளர்களது பிரச்சினைகள் பற்றி கதைத்திருக்கலாம். 13-வது திருத்தத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடி இருக்கலாம்.

எனவே அவர் வராததும் எமது மக்களுக்கு துரதிர்ஷ்டவசமானதாகவே அமைந்துவிட்டது என அவர் மேலும தெரிவித்தார். (செ-6)

# சட்டம் ஒழுங்கு...

மீள்குடியேற்று மாறு வலியுறுத்தி தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய போது அதனைத் தடுக்கும் நோக்கத்திலும் அவர்களை அச்சுறுத்தும் வகையிலும் இனம் தெரியாத நபர்கள் செயற்பட்டுள்ளனர்.

மக்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்ட பேருந்துகள் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டுள்ளன. மக்களினால் போராட்டம் எதற்காக நடத்தப்பட்டது என்பது வேறு விடய மாகயிருந்த போதும் அவர்களின் ஜனநாயக உரிமையை தடுக்க முடியாது.

இந்த மக்களினால் உண்ணாவிரதப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்த போது பருத்தித்துறைப் பகுதியில் பலர் மீதும் பலரது வாகனங்கள் மீதும் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இதனைத் தடுக்க பொலிஸார் எந்த வித நடவடிக்கையினையும் எடுக்க முன்வரவில்லை.


வேலை வாய்ப்பு

Jana Digital Printing

- Receptionists
- Graphic designers
- Welders
- Welding helpers

ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

சுயவிபரக்கோவையுடன் நேரில் வரவும் (21.11.2013, 9.30am - 4.00pm)

தொடர்புகளுக்கு: மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.

021 221 3233

(C-5518)


பெண்கள்வன்புணர் வின்பின் கொலை செய்யப்படுவதும் அவர்களின் சடலங்கள் கிணறுகளில் இருந்து மீட்கப்படுவதும் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றது என்றார்.

இதன்போது அமைச்சர் டகளஸ் தேவானந்தா, வெள்ளைவான கடத்தல் போய் இப்பொழுது பச்சை வான் கடத்தல் இடம்பெறுவதாக செய்திகள் வெளியாகின்றன.

யாழ்.ராசாவின் தோட்ட வீதியில் இளம்பெண்ணொருவர் வானில் கடத்த முற்பட்டதாகவும் அந்தக் கடத்தலுடன் தொடர்புடைய நபர்களை இராணுவத்தினர் சுமார், 500 பேர்வந்துமீட்டதாகவும் இணையத்தளங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன இதில் உண்மையுள்ளதா? எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளிக்க யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.சி.எம். முகமட் ஜெப்றி எழுந்தபோது பிரதிப் பொலிஸ்மா அதிபர் வரவில்லையா எனக் கேள்வி எழுப்பிய அமைச்சர் டக்ளஸ், இது முக்கியமான கூட்டம் அல்லவா? இதற்கு அவர் வந்திருக்க வேண்டும் எனக் கூற அதற்கு அவர் வேறு ஒரு கூட்டத்திற்கு சென்றுவிட்டதாக ஜெப்றி பதிலளித்தார்.

இதன்பின்பு கூட்டத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்தார். புத்தூரில் பெண்ணொருவர் பாலியல் வன்புணர்வின் பின் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய நபரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இத்தோடு வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய பலரையும் கைது செய்து சட்டத்தின்முன நிறுத்தி தண்டனை பெற்று கொடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் மீதும் பொலிஸ் வாகனத்தில் மீதும் தாக்குதல் நடத்தப்பட்ட பின்பும் தமது நடவடிக்கைகளை குறைக்கவில்லை என்றும் தெரிவித்த அவர் குற்றச் செயல்களை முற்றாக கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு ராசாவின் தோட்டப் பகுதியில் இளம் பெண்ணொருவர் வானில் கடத்த முற்பட்ட சம்பவம் தொடர்பாகவும் விளக்கமளித்திருந்ததோடு இணையத்தளங்களில் வெளியான செய்திகளையும் மறுத்திருந்தார்.

இதனையடுத்து யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்பு குழுவை மீள் சீரமைத்து குற்றச்செயல்களைக்கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இதற்கு அனுமதிவழங்கியுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இதேவேளை மரக் கடத்தல், மண்ணகழ்வு போன்ற நடவடிக்கைகளுக்கு பொலிஸார் உடந்தையாக செயற்படுவதாகவும் காரைநகர் பகுதியில் பொலிஸ்காவல் நிலையம் ஒன்றை அமைக்கு மாறும்விடுக்கப்பட்ட வேண்டுகோள் இன்றும் நடைமுறைப்படுத்தப்படவில்லை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன. (செ-6)




LAKELAND INTER - AMERICAN SCHOOL

Montessori, Primary & Day care centre (English Medium)

British National Curriculum



154, Brown Road, Jaffna.
Tel: 021 222 6242, 021 222 5600.
aerolankajaf@gmail.com

யாழ்மண்ணில் இயங்கி வருகின்ற ஆங்கில மொழி மூலம் AMI முறையிலான பாலர் முன்பள்ளிக்கான கற்பித்தல் நடைபெற்று வருகின்றன.
2014ம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
ஆர்வமுள்ள பெற்றோரிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

PRIMARY : தரம் 1-5 வரையிலான வகுப்புக்கள் (British National Curriculam) மூலம் கற்பித்தல் நடைபெற்று வருகின்றன. இவற்றுக்கான விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இத்துடன் National Curriculum ஆங்கில மொழி மூலமான கற்பித்தல் தை மாதம் 2014ல் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவற்றுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

VISION : To become a model school which transforms personalities into academically sound,physically healthy, Multi skilled individuals with good human values to be responsible future leaders of the global community.

OBJECTIVES

To Create an opportunity-filled environment conducive to the child to explore the environment at his / her own capacity and carve his / her niche in today's world.

To provide enriching strategies that would encourage students to be goal- oriented and to be self managers.

To empower the student to succeed in today's dynamic world by integrating general education and other practical skills, thereby providing a TOTAL education, satiating the need of the intellect, the body and the soul.

கொழும்பில் இயங்கி வருகின்ற LAKELAND INTER - AMERICAN SCHOOL இன் கிளை யாழ் மண்ணில் இயங்கிக்கொண்டிருக்கின்றது, இதன் சேவையை தென்மராட்சி மக்களின் நலன் கருதி, சாவகச்சேரியிலும் ஆங்கில மொழி மூலம் AMI முறையிலான பாலர் முன்பள்ளியினை 2014ம் ஆண்டு தை மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களை மேற்காணும் யாழ் கிளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வயது எல்லை 2 1/2 - 5


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.